விலை ரூபா: 7.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii


பக்கங்கள்:- பதினான்கு

சங்கு 06 | வள்ளுவர் ஆண்டு 2035 | மார்கழி 12 | திங்கட்கிழமை (27.12.2004) | தொலைபேசி 2223378, 2227644 | ஒலி 08

ராம்கோ சீமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT

# சீற்றங்கொண்டெழுந்தது கடல்

# பல்லாயிரக்கணக்கானோர் பலி!




(வலம்புரிச் செய்தியாளர் குழு )

**ஆசியாவை உலுக்கிய மிக மோசமான கடற்பிரளய கொந்தளிப்பினால் ஒட்டுமொத்தமாக தென்கிழக்காசியாவில் 30 ஆயிரத்திற்கும் அதிகமானோர் நேற்றுப் பலியாகியுள்ளதாக அஞ்சப்படுகிறது.**

**இதன் தாக்கம் இலங்கையின் கரையோரப் பகுதிகளை அகோரமாகத் தாக்கியதில் இலங்கையில் மட்டும் 5 ஆயிரத்திற்கும் அதிகமானோர் பலியாகியுள்ளனர்.**

**இதனால் யாழ். மாவட்டம் உட்பட தமிழர் தாயகப் பிரதேசம் எங்கும் மோசமான பாதிப்புகள் ஏற்பட்டுள்ளதுடன் வரலாறு காணாத பாரிய மரண ஓலமும் களேபரமும் ஏற்பட்டுள்ளது.**

## வடமராட்சியில் மட்டும் 2 ஆயிரத்துக்கும் அதிகமானோர் பலி!

வடமராட்சிப் பகுதியில் நேற்றுக் காலை திடீரென ஏற்பட்ட கடற் கொந்தளிப்பினால் கரையோரப் பகுதியைச் சேர்ந்த சுமார் 2 ஆயிரத்திற்கும் அதிகமானோர் மிகவும் பரிதாபகரமான முறையில் பலியாகியுள்ளனர்.

கடலில் இருந்து மிக உயரத்தில் சீறிப் பாய்ந்து வேகமாக எழுந்துவந்த பாரிய கடலலை வீடுகள், வீதிகளை மேவிப் பாய்ந்து, அங்கிருந்தவர்களை மோசமாகத் தாக்கியதில் சில நிமிட நேரத்தில் அவர்கள் பரிதாபகரமாக உயிரிழந்தனர்.

இதனால் பல நூற்றுக்கணக்கானோர் காணாமல் போனதாகவும் அஞ்சப்படுகிறது. நேற்று நள்ளிரவு வரை (இச் செய்தி அச்சுக்குப் போகும் வரை) தொடர்ந்து கிடைத்த தகவலின் அடிப்படையில் காணாமல் போனவர்களின் எண்ணிக்கையையோ உயிரிழந்தவர்களின் எண்ணிக்கையையோ உறுதியாக வரையறுக்க முடியவில்லை. ஏனெனில் தொடர்ந்தும் உயிரிழந்தவர்கள் காணாமல் போனவர்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே செல்கிறது.

வடமராட்சியின் கற்கோவளம், இன்பருட்டி, வல்வெட்டித்துறை சக்கோட்டை, சுப்பர்மடம், நாகர்கோவில், பொற்பதி, குடத்தனை, மணற்காடு, முனை, பருத்தித்துறை, தொண்டமனாறு, மருதங்கேணி ஆகிய இடங்களில் பாரிய அழிவுகளும் சேதங்களும் ஏற்பட்டுள்ளது.

அப் பகுதியில் கடல் இரைச்சலை தவிர மயான அமைதி நிலவுகிறது. பிணவாடை வீசிக்கொண்டிருக்கிறது. உலக யுத்தத்தில் அழிந்த பிரதேசங்கள் போல் அவை காட்சி அளிக்கின்றன. வீடுகள்,

(14 ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்கு மாகாணத்தில்...

### மட்டக்களப்பில்...

மட்டக்களப்பில் ஏற்பட்ட கடற்கொந்தளிப்பால் ஆயிரத்திற்கு மேற்பட்டோர் இறந்திருக்கலாம் என அஞ்சப்படுகிறது. மட்டக்களப்பு வைத்தியசாலையில் நேற்று மாலை வரை 350 ற்கும் மேற்பட்ட சடலங்கள் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இதில் அதிகமான சடலங்கள் இனங்காணப்பட்டுள்ளன.

வாழைச்சேனை வைத்தியசாலையில் நூறிற்கும் மேற்பட்ட சடலங்களும் களுவாஞ்சிக்குடி வைத்தியசாலையில் 150 ற்கும் மேற்பட்ட சடலங்களும் நேற்று வரை ஒப்படைக்கப்பட்டுள்ளதாக எமது மட்டக்களப்பு செய்தியாளர் தெரிவித்துள்ளார்.

### காத்தான்குடியில்...

காத்தான்குடியில் 90 ற்கும் மேற்பட்ட முஸ்லிம்களின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன. ஒந்தாச்சிமடம் வயோதிபர் மடத்திலிருந்து 35 வயோதிபர்கள் கடல் நீரினால் அடித்துச் செல்லப்பட்டுள்ளனர். வெள்ளத்தினால் அடித்துச் செல்லப்பட்டவர்களின் சடலங்கள் மரங்களிலும் கட்டட இடிபாடுகளுக்குள்ளும் சிக்குண்டு காணப்படுகின்றன.

### திருகோணமலையில்...

திருகோணமலையில் 500 ற்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்துள்ளனர். கிண்ணியா, மூதூர் ஆகிய பிரதேசங்களிலேயே இழப்புக்கள் அதிகமாக ஏற்பட்டுள்ளன.

### அம்பாறையில்...

அம்பாறை மாவட்டத்தில் ஏற்பட்ட கடல் அனர்தத்தினால் 800 ற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளதுடன் ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் காணாமற்போயுள்ளனர்.

நிந்தவூர், காரைதீவு, திருக்கோவில் மற்றும் பெரிய நீலாவணைப் பகுதிகளில் சுமார் 500 ற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர்.

இதேவேளை கிழக்கு மாகாணத்திற்குள் கடல் நீர் உட்புகுந்ததன் காரணமாக ஒரு இலட்சத்திற்கும் அதிகமான மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர். (இ,ச)

## வன்னிப் பெருநிலப்பரப்பில்...

(லண்டன்)

தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளான முல்லைத்தீவு, மருதங்கேணி ஆகிய பகுதிகளில் மட்டும் நேற்று இடம்பெற்ற கடற்கொந்தளிப்பில் 800 ற்கும் அதிகமானோர் பலியாகியிருப்பதாக தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

முல்லைத்தீவு மாவட்ட கரையோர கிராமங்களும் வடமராட்சி கிழக்கு பகுதி கரையோர கிராமங்களும் முற்றாக கடல் வெள்ளத்தால் மூழ்கியுள்ளன. அங்கிருந்த பெருமளவான மக்கள் உயிரிழந்துள்ளதுடன் காயமடைந்துமுள்ளனர். இடம்பெயர்ந்த ஆயிரக் கணக்கான மக்கள் கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவில் உள்ள பாடசாலைகளிலும் கோவில்களிலும் தஞ்சமடைந்துள்ளார்கள். அவர்களுக்கு போராளிகள், தமிழர் புனர்வாழ்வுக் கழக உறுப்பினர்கள் தமது உதவிகளை வழங்கிவருகின்றனர்.

முல்லைத்தீவில் உள்ள முள்ளியவளைப் பாடசாலையில் 300 சடலங்களும் புதுக்குடியிருப்பு வைத்தியசாலையில் 200 வரையான சடலங்களும் கிளிநொச்சி வைத்தியசாலையில் 100 வரையான சடலங்களும் மருதங்கேணி வைத்தியசாலையில் 300 வரையான சடலங்களும் வைக்கப்பட்டுள்ளன.

மீட்கப்பட்ட அனைத்து சடலங்களும் வெள்ளத்தின் மேலே மிதந்து வந்த சடலங்களாகும். ஆனால் இடிபாடுகளுக்குள் கிடக்கும் உடல்கள் இன்னமும் மீட்கப்படவில்லை.

இதேவேளை முல்லைத்தீவுக் கடலுக்குச் சென்ற மீனவர்கள் நேற்று மாலை வரை கரை திரும்பவில்லை என தமிழ்ச்செல்வன் மேலும் தெரிவித்தார். (த-04)



கடலின் கொந்தளிப்பிற்கு பலியான பிஞ்சு தாயோடு மீளாத் துயில் கொள்ளும் உருக்கமான காட்சி. மேலும் படங்கள் உள்ளே...

## வடமராட்சியில் பலியானோர்

(பருத்தித்துறை)

வடமராட்சி கரையோரப் பகுதிகளில் நேற்று ஏற்பட்ட கடல்கொந்தளிப்பில் சிக்குண்டு இறந்தவர்களில் அடையாளம் காணப்பட்டவர்களின் பெயர் விபரங்கள் வருமாறு,

கந்தையா தேசிங்கராசா ( வயது38, தும்பளை கிழக்கு), தேசிங்கராசா இளவரசி (வயது 26, தும்பளை கிழக்கு), இராசு அமராவதி (வயது 50, தும்பளை கிழக்கு), ஜெயரூபன் வனிதா (வயது 13, தும்பளை கிழக்கு), சந்திரதாஸ் சர்மிலா (வயது 9, தும்பளை கிழக்கு), நவரத்தினம் சின்னாச்சி (வயது 55, தும்பளை கிழக்கு),

செல்வம் பிரபாகரன்(வயது 19, அல்வாய்), சூரியமூர்த்தி சுலோசனா (வயது 28, கரணவாய் கரவெட்டி), நந்தகோபால் நவநீதன் (வயது 12, கற்கோவளம்), கந்தவனம் சிவக்கொழுந்து (வயது 75, கற்கோவளம்), சிவகரன் சுகிர்தா (வயது 3 மாதம், தும்பளை கிழக்கு), இரத்தினவடிவேல் அருச்சுனராசா (வயது 50, ஆதிகோவிலடி வல்வெட்டித்துறை),

தங்கவடிவேல் மகாலட்சுமி (வயது 50, கற்கோவளம்), ஆறுமுகம் வள்ளிப்பிள்ளை (வயது 72, தும்பளை), கந்தசாமி இலட்சுமியம்மா (வயது 85, வியாபாரிமூலை), கந்தசாமி தங்கலீலாம்மா (வயது 65, வியாபாரிமூலை), அம்பிகாவதி இராஜேஸ்வரி (வயது 45, தும்பளை கிழக்கு), சுனேந்திரன் கலைவாணி (வயது 23, தும்பளை கிழக்கு), இ[illegible] கனிஸ்ரன்

(14 ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# இன்று ஒரு தகவல்

## அன்பும் ஆணவமும்

ஒரு ஊரில் ஒரு பெரிய மாமரம் கம்பீரமாக நின்றுகொண்டிருந்தது. அதில் நிறையப் பூக்கள், கனிகள், பறவைகள் இருந்தன. ஒரு சிறு பையன் அந்த மரத்தடியில் வந்து விளையாடுவது வழக்கம். மரத்திற்கு அந்தப்பையன் மீது ஒரு பாசம் உண்டாக ஆரம்பித்தது.

இந்தப் பையன் அந்த மரத்திலுள்ள பூக்களைப் பறிக்க வேண்டும், பழங்களைப் பறிக்கவேண்டும் என்று ஆசைப்பட்டான். அதற்காகவே அந்த மரம் தனது கிளைகளை வளைத்து அவனுக்கு எட்டுகின்ற அளவுக்குத் தலை சாய்த்தது. பையன் பூக்களைப் பறித்தான். மரம் சந்தோஷப்பட்டது.

மரம் அன்பின் அடையாளம். அதனால் அது கொடுப்பதில் சந்தோஷப்பட்டது. மனிதன் ஆணவத்தின் அடையாளம். அதனால் இவன் பறிப்பதில் சந்தோஷப்பட்டான். பையன் வளர்ந்தான். அந்த மரத்தின் அடியில் படுத்துத் தூங்கினான். பூக்களைப் பறித்து மலர்க் கிரீடம் செய்து தலையில் சூடிக்கொண்டான். அதைப் பார்த்து அந்த மரம் சந்தோஷப்பட்டது.

சிலநாட்கள் கழிந்தன இவன் இன்னும் கொஞ்சம் பெரியவனானான். அந்த மரத்தில் ஏறி கிளையில் அமர்ந்து ஊஞ்சலாட ஆரம்பித்தான். அவனுக்கு சந்தோஷத்தைக் கொடுப்பதில் மரத்திற்கு ஆனந்தம். இது அன்புக்கும் ஆணவத்திற்கும் உள்ள வித்தியாசம்.

பையன் இன்னும் கொஞ்சம் வளர்ந்தான். அவனுக்குக் கடமை லட்சியம் எல்லாம் வந்து சேர்ந்தது. படித்துப் பரீட்சையில் சித்தி பெறவேண்டியிருந்தது. அதனால் மரத்திடம் வருவதில்லை அவன்.ஆனால் மரம் இவனுக்காக காத்துக்கொண்டிருந்தது. இவன் உலக விடயங்களில் மூழ்கிவிட்டான்.

தற்செலயலாக ஒருநாள் அந்தப் பக்கமாகப் போனான். மரம் அவனைப் பார்த்தது " மறந்துவிட்டாயா என்னை? நான் உன்னைப் பார்க்கவேண்டும் என்று ஆவலாகக் காத்துக்கொண்டிருக்கிறேன்" என்றது. இவன் அதற்கு "நீ என்ன வைத்திருக்கிறாய்? நான் ஏன் உன்னிடம் வர வேண்டும்? உன்னிடம் பணம் இருக்கிறதா சொல் வருகிறேன். ஏனென்றால் நான் இப்போது பணத்தைத் தான் தேடிக்கொண்டிருக்கிறேன்" என்றான். "உனக்குப் பணம் தானே வேண்டும் எனது பழங்களைப் பறித்துக் கொள் அதை விற்பனை செய் பணம் கிடைக்கும்" என்றது மரம்.

உடனே இவன் மரத்தில் ஏறினான். பழங்களைப் பறித்தான். பழுக்காத காய்களையும் பறித்துவிட்டான். தனது கிளை கொம்புகள் உடைந்தாலும் கூட அந்த மரம் கவலைப்படவில்லை சந்தோஷப்பட்டது. இவன் பழங்களைப் பொறுக்கிக்கொண்டு அந்த மரத்துக்கு ஒரு நன்றி கூடச் சொல்லாமல் அவன் திரும்பிப் போய்விட்டான்.

அதன் பின் அவன் அந்தப் பக்கமே திரும்பவில்லை. பணம் சம்பாதிப்பதிலேயே குறியாக இருந்தான். மரத்திற்கு அவன் வரவில்லையே என்று மீண்டும் வருத்தம். பல வருடங்கள் கழித்து அவன் மீண்டும் வந்தான். 'வா மகனே... என்னை வந்து கட்டிப்பிடித்துக்கொள்'' என்றது அந்த மரம். இவன் 'நான் என்ன இன்னும் சின்னப் பிள்ளையா உன்னை வந்து கட்டிப்பிடித்துக் கொள்ள' என்றான். நான் இப்போது ஒரு வீடு கட்டப்போகிறேன்.

அதற்கு உன்னால் உதவ முடியுமா? என்றும் கேட்டான். "எனது கிளைகளை வெட்டிக்கொள்" என்றது மரம் சிறிது நேரத்தில் மரத்தை மொட்டையடித்துவிட்டன்.

மீண்டும் சில நாட்கள் கழித்து அந்த மனிதன் வயதாகிக் கிழவனாகி வந்தான். "நான் தூர தேசங்களுக்குப்போய் பணம் உழைக்க வேண்டும் என்று ஆசைப்படுகிறேன் நான் பிரயாணம் செய்ய ஒரு படகு தேவை அதற்கு உதவ முடியுமா?" என்றான். அதற்கு அந்த மரம் "அது ஒன்றும் பெரிய பிரச்சினை இல்லை என் அடிமரத்தை வெட்டிக்கொள்'' என்றது மரம்.

அவன் வெட்டினான், படகு செய்தான், போய் விட்டான். இனித் திரும்பி வருவானோ மாட்டானோ தெரியாது ஆனால் இந்த அடிமரம் அவனுக்காகக்காத்துக் கொண்டிருக்கும் ஏனென்றால் இது அன்பின் அடையாளம். அவன் ஆணவத்தின் அடையாளம். அன்பு கொடுக்கத் தான் ஆசைப்படும். ஆணவம் வாங்குவதற்குத் தான் ஆசைப்படும். இப்படி ஒரு கதையைச் சொல்லியிருக்கிறார் ஒரு பேரறிஞர்.

நமது ஆள் ஒருவன் "கடல் கடந்து போயுள்ள என் நண்பன் வரப்போகிறான் அவனுக்காக இந்தக் கடற்கரையில் காத்துக்கொண்டிருக்கிறேன்'' என்றான். "அவ்வளவு பிரியமா அவன் மீது?" என்றேன். அப்படி இல்லை அவன் போகும்போது நான் இங்கே கட்டி வைத்திருந்த எனது படகைக் கடத்திக் கொண்டு போய் விட்டான். திரும்பி வந்ததும் அவனைக் கொஞ்சம் கவனிக்க வேண்டும் அதுதான் காத்துக் கொண்டிருக்கிறேன் என்றான் அவன்.

**தென்கச்சி கோ. சுவாமிநாதன்**

# சமாதானப் பேச்சுக்களை விடுதலைப்புலிகளுடன் மீளவும் ஆரம்பிப்பதே எமது ஒரே நோக்கமாகும்

## ஜனாதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)

அரசியலமைப்பை மாற்றுவதோ, சர்வஜன வாக்கெடுப்பை நடத்துவதோ எமது நோக்கமல்ல. தேக்க நிலையில் உள்ள சமாதானப் பேச்சுவார்த்தைகளை விடுதலைப்புலிகளுடன் மீண்டும் ஆரம்பிப்பதே எமது நோக்கமாகும் என ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.



ஜனாதிபதி இவ்விடயம் குறித்து மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் பெரும்பாலானோர் அரசியலமைப்பு மாற்றங்கள் மற்றும் சர்வஜன வாக்கெடுப்பு போன்றவற்றை மேற்கொள்வதையே எதிர்பார்த்துள்ளார்கள்.

ஆனால், நாம் அவ்வாறு எதனையும் மேற்கொள்ளாமல் அவற்றையெல்லாம் பின்தள்ளி வைத்து விட்டு தேக்க நிலையில் உள்ள சமாதானப் பேச்சுவார்த்தைகளை, மீளவும் விடுதலைப்புலிகளுடன் முன்னெடுப்பது பற்றியுமே ஆராய்ந்து வருகிறோம். சமாதானப் பேச்சுக்களை முன்னெடுக்கும் போது பங்காளிக் கட்சியான மக்கள் விடுதலை முன்னணியின் எதிர்ப்பை எவ்வாறு சமாளிப்பது என்பது பற்றியும் தாம் சிந்தித்து வருகிறோம்.

இவ்வாறு சமாதானப் பேச்சுக்களை முன்னெடுக்கும் போது மக்கள் விடுதலை முன்னணி எதிர்க்கும் பட்சத்தில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஐக்கிய தேசியக்கட்சியின் ஒருபகுதியினர் மற்றும் மக்கள் விடுதலை முன்னணியில் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டுமென்று கருத்து கொண்டோர் ஆகியோரின் உதவிகளைப் பெற முயற்சி செய்கின்றேன்.

அதேவேளை, தனது ஆட்சிக்கும் சமாதான முயற்சிக்கும் பாதகம் வரக்கூடிய நிலையைத் தவிர்க்க முடியும் எனவும் நம்பிக்கை வெளியிட்டுள்ளார். (ந-8)

## சத்துணவு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குள் இயங்கும் தாய் சேய் நலன்புரி நிலையங்களில் சிகிச்சை பெறும் குழந்தைகளிற்கான சத்துணவு சாவகச்சேரி நகரசபையினால் தற்போது வழங்கப்பட்டு வருகின்றது.

நகரசபைப் பகுதியில் வாழ்ந்து வரும் போசாக்குக் குறைந்த பிள்ளைகளிற்காக ஒவ்வொரு வருடமும் இந்தத் திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (ப-47)

# சுகாதாரப் போசாக்கு அமைச்சின் தொற்றுநோய் தடுப்புப் பிரிவின் அதிகாரிகள் குழு யாழ்.விஜயம்

(சுதுமலை)

சுகாதார போசாக்கு நலன்புரி அமைச்சின் தொற்று நோய் பிரிவைச் சேர்ந்த வைத்திய அதிகாரிகளைக் கொண்ட குழு கடந்த புதன், வியாழக்கிழமைகளில் யாழ். பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்திற்கு வருகை தந்தனர்.

இவர்கள் தொற்றுநோய்கள் அதிகம் உள்ள பிரதேசங்களை நேரில் சென்று பார்வையிட்டதுடன், சம்பந்தப்பட்ட சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைகளிலும் தொற்றுநோய் தொடர்பான புள்ளி விபரங்கள், ஆவணங்கள் என்பனவற்றை ஆய்வுக்குட்படுத்தினார்கள்.

யாழ். குடாநாட்டில் அண்மைக்காலங்களாக நீர் மற்றும் உணவு மூலம் பரவும் நோய்களான நெருப்புக்காய்ச்சல், வயிற்றோட்டம், செங்கன்மாரி போன்றவை அதிகரித்து இருந்ததாகவும் மற்றும் திடீர் காய்ச்சல், இறப்பு விபரங்களையும் பெற்றுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

மேற்படி குழுவினர் யாழ்போதனா வைத்தியசாலைக்கும் விஜயம் செய்து தொற்று நோய்கள் பற்றிய ஆய்வை மேற்கொண்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ப-252)

# இராசி பலன்

**27.12.2004**

**(மார்கழி 12 , திங்கட்கிழமை)**

**திருவாதிரை பி.ப 2.25 மணிவரை**

**பிரதமை மு.இ 10.52**

**இராகுகாலம் 7.58 - 9.28 மணிவரை**

**சுபநேரம் 12.28 - 1.58 மணிவரை**

**திருவெம்பாவை 10ம் நாள்**

**மேடம்** *நினைத்த காரியம் கைகூடும், இனிய அனுபவம், வாக்கு மேன்மை, சகோதரர் உதவி,*

**இடபம்** *நிலை மாற்றம், மாதர்நட்பு, தொழில் கஷ்டம், காரிய தாமதம்.*

**மிதுனம்** *நல்ல முயற்சி, ஆழ்ந்த சிந்தை, குடும்ப சுகம், வாக்குப் பலிதம்.*

**கடகம்** *கோபப்படுதல், தந்தை வழி உறவு, எதிர்பாராத நன்மை, சுபசெலவு.*

**சிங்கம்** *தனலாபம், குடும்ப மகிழ்ச்சி, கௌரவம், தெய்வ தரிசனம்.*

**கன்னி** *அதிகாரம், கடின முயற்சி, பிறர் உதவி, போசன சுகம்.*

**துலாம்** *ஆன்றோர் மதிப்பு, புதிய திட்டமிடல், மனச்சஞ்சலம், முயற்சி தாமதம்.*

**விருச்சிகம்** *உறவினர் மனஸ்தாபம், போசன சுகம், உடல் நலக்குறைவு, சகோதரர் உதவி,*

**தனுசு** *காரிய அனுகூலம், அபூர்வ சந்திப்பு, தெய்வ தரிசனம், செய்தொழில் விருத்தி.*

**மகரம்** *நல்ல சம்பவம், தேக ஆரோக்கியம், திடீர் பயணம், எதிர்பாராத நன்மை.*

**கும்பம்** *தாழ்ந்த சுபாவம், எடுத்தகாரியம் தாமதமாகும், சயன சுகக்குறைவு, தொழில் சிறப்பு.*

**மீனம்** *பயந்த சுபாவம், அதிகாரிகள் ஒத்தாசை, வாகன சுகம், முயற்சி கைகூடும்.*

**பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது - வளவன்**

# தென்னிலங்கையைத் திணறடிக்கும் இன்புளூவன்ஸா-பி வைரஸ்காய்ச்சல்

## இதுவரை 10 பேர் பலி

(கொழும்பு)

இன்புளூவன்ஸா- பி வைரஸினால் பீடிக்கப்பட்டவர் எனச் சந்தேகிக்கப்படும் மேலும் ஒருவர் மாத்தறை ஆதார வைத்தியசாலையில் நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார்.

நிமோனியா மூலம் இம் மரணம் சம்பவித்துள்ளதாக விசாரணைகள் மூலம் தெரிய வந்துள்ளதாக வைத்திய அதிகாரி தெரிவித்தார்.

இவரது இரத்த மாதிரி பரிசோதனைக்காக கொழும்பு வைத்தியசாலை ஆய்வுகூடத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

தென் பகுதியில் பரவிய இந் நோயினால் இதுவரை 10 பேர் உயிரிழந்துள்ளனர். அவர்களில் 9 பேர் எம்பிலியபிட்டியவைச் சேர்ந்தவர்களாவர்.

இந் நோய் காரணமாக இதுவரை எம்பிலியப்பிட்டிய வைத்தியசாலையில் சுமார் 70 பேர் வரை சிகிச்சை பெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ந-8)

# சுவிஸ் மோசடி நபரொருவர் இலங்கைக்குத் தப்பி வருகை

(கொழும்பு)

சுவிற்சர்லாந்தில் பெருந்தொகைப் பணத்தை திருடியதாகக் குற்றஞ்சாட்டப்பட்ட அதே நாட்டைச் சேந்த வர்த்தகர் ஒருவர் இலங்கைக்குத் தப்பி வந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சுவிற்சர்லாந்தைச் சேர்ந்த எலன் பெரகிறிஸ்ரியன் என்ற நபரே இவ்வாறு இலங்கை வந்தவராவார். கடந்த ஆறு மாதங்களாக இலங்கையில் தங்கியுள்ள இவர் அண்மையில் நீர்கொழும்புப் பகுதியில் காணப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நபரை ''இன்ரபோல் நிறுவனம்'' தேடி வருகின்றது.இவர் நடாத்தி வந்த பெருமளவான நிறுவனங்கள் வங்குரோத்து நிலையை அடைந்து வந்ததையடுத்தே இவர் நிறுவனங்கள் பலவற்றில் பணத்தைத் திருடிக்கொண்டு இலங்கை வந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ந-8)

# வடமராட்சியில் கடற்கொந்தளிப்பின் கோரங்களின் அவலம்



















# வடமராட்சியில் கடற்கொந்தளிப்பின் கோரங்களின் அவலம்





கொழும்பில் ஏற்பட்ட அவலம்



# பக்தியின் வழிவந்த நாச்சியார் திருமொழி

கலாநிதி
திருமதி மனோன்மணி சண்முகதாஸ்

வையத்துள் வாழ்வாங்கு வாழ்வதற்கு வழிகாட்டிய நமது முன்னோர் வரிசையில் நாச்சியார் தனிச் சிறப்புடையவர். திருமால் மீது எல்லையற்ற பக்தி கொண்டு ஒழுகிய பெரியாழ்வாரின் வளர்ப்பு மகள். கோதை என்ற பெயரோடு சீரோடு வளர்ந்தவள். பூமாலை சாற்றும் வழிபாட்டு நடைமுறையில் இணைந்து பாமாலை சூட்டிய பாவையாகப் பெருமை பெற்றவள். பெரியாழ்வார் கண்ணனுக்கு எனக் கட்டி வைத்த பூமாலையைத் தானும் சூடி அழகு பார்த்த பின்பே கண்ணன் சூட்டக் கொடுத்தவள். அதனால் "சூடிக் கொடுத்த சுடர்க்கொடி" என்ற பெயராலும் அழைக்கப்பட்டவள். துளசிப் பாத்தியில் கலியுகம் ஸ்ரீபராங்குசர் அவராதி 98 வதான நள வருஷம் ஆடிமாதம் சுக்கில பஷம், சதுர்த்தசி திதி, செவ்வாய்க் கிழமை, பூரநட்சத்திரத்தன்று ஆண்டாள் பெரியாழ்வாரால் கண்டெடுக்கப்பட்டவள். பெரியாழ்வார் வாழ்ந்த ஸ்ரீ வில்லிபுத்தூர் தெய்வீக ஆற்றல் பெற்றது. மலரிட்டு வணங்கும் வழிபாட்டின் முதற்பேறாக அழகிய பெண் மகவாக நாச்சியார் பெரியாழ்வாருக்குக் கிடைத்தாள்.

மனித வாழ்வுக்கு ஒரு இலக்கு உண்டு. அதை அடைய மனிதன் முயற்சி செய்யவேண்டும். பிறப்பின் பயனை சிறையனுபவம் பெற்றவர் தத்தம் அனுபவ நிலைக்கேற்ப விளக்கிக் கூறியுள்ளனர். இறைவனுடைய அற்புதக்கோலம் கண்டு நித்தம் நிறைவான மகிழ்வு எய்த அப்பர் மனிதப்பிறவி வேண்டுமென்றார். சிவனருளில் மனம் ஒன்றிய காரைக்காலம்மையார் மீண்டும் பிறப்புண்டேல் இறையை மறவாதிருக்க வரம் கேட்டார். ஆனால் ஆண்டாள் காட்டும் பக்தி வாழ்வியல் மிகவும் உன்னதமானது. இறைவனோடு ஒன்றி இருக்க விரும்பி நோன்பு நோற்று அவனோடு இணையும் புதிய தொரு அன்பு நெறியை ஆண்டாள் விளக்கியுள்ளாள். கண்ணன் மீது கொண்டிருந்த எல்லையற்ற பக்தி காதல் நிலையாக மாறியது. அவனைச் சென்றடைவதே மண்ணிற் பிறந்தார் கடன் என்பதைத் தெளிவுபடுத்தியவர் நாச்சியாரே.

அவருடைய புதியநெறி வழிபாடு, உடல், உணர்வு, மனித நிலை என்ற மூவகை நிலையில் சென்றது. வீட்டு வாழ்வியல் நடைமுறைகளோடு பக்தி உணர்வையும் கலந்து மனித விழுமிய வெளிப்பாட்டை நெறிப்படுத்திநின்றது. இன்றைய வேகமான மனித வாழ்வியல் நடைமுறை என்னும் தளத்தில் நின்று ஆண்டாளின் பக்தி வெளிப்பாட்டை உற்று நோக்கும் போது மிகப்பெரிய உண்மையொன்று வெளிப்படுகின்றது.

எம்மைச் சூழ்ந்துள்ள இயற்கையின் பேராற்றலை நாம் சில வேளைகளில் மறந்துவிடுகின்றோம். அத்தகைய மறதிவேளைகளில் எமது மனித குணங்கள் ஐம்புலன்களின் செல்வாக்கிற்கு உட்பட்டுத் திசைமாறித் தொழிற்படத் தொடங்கிவிடுகின்றன. மெய், வாய், கண், மூக்கு, செவி என்ற ஐம்பொறிகளும் தறிகெட்டு இயங்கத்தொடங்குகின்றன. இத்தகைய வேளையில் மீண்டும் புலன்களையும் பொறிகளையும் சீரான செயற்பாட்டிற்குக் கொண்டு வருவதற்கு ஒரு வழிகாட்டல் இன்றியமையாதது. அந்த செம்மையான வழியையே ஆண்டாள் காட்டிச் சென்றுள்ளார். பக்தி என்னும் காதல் நெறி நின்று மனிதக்குணங்களைச் செம்மைப்படுத்த ஆற்றுப்படுத்தியுள்ளார்.

அவர் காட்டிய நெறியை உணர்ந்து அதன் வழிச்சென்று பயனடைவதற்கு பக்தியின் மொழியாக தமிழ்மொழியை ஒரு சிறந்த ஊடகத்தொடர்பால் தொடர்பாடல் மொழியாகப் பயன்படுத்தியுள்ளார். அவர் பாடிய திருப்பாவை, நாச்சியார் திருமொழி என்னும் பாடல் தொகுதிகளை ஆழமாகப் படிக்கும்போது இதனைத் தெட்டத் தெளிவாக உணர முடிகின்றது. திருப்பாவை 30 பாடல்களின் தொகுப்பு. நாச்சியார் திருமொழி 140 பாடல்களின் தொகுப்பு. ஆண்டாளின் புதிய நெறிபுகட்டும் கவிதைகள் தமிழ்க்கவிதைப் பரப்பிற்கே புதிய வளத்தைச் சேர்ந்துள்ளன. இன்னிசையால் இன்தமிழால் பாடப்பட்ட கவிதைமாலை கண்ணன் அணியும் மாலையாக அன்றி தமிழறிந்தவர் அனைவருமே உள்ளத்தில் சூடும் மாலையாகப் புதுப்பொலிவு பெற்று விளங்குகிறது. பூமாலை சூடும் பண்பான மனிதவாழ்வியலைப் பாமாலை சூடும் ஒரு மரபான வாழ்வியல் நெறிக்குள் செலுத்தியவர். அதனால் அவள் பாடிய பாடல்களை. அவை காட்டும் புதிய பொருத்தமான வாழ்வியல் நெறியை இன்றைய இளந்தலை முறையினர்க்கு ஏற்றவாறு எடுத்துரைக்க வேண்டியபணி எம்முடையதாகும்.

ஆண்டாள் பாடிய திருப்பாவையில் ஒரு வழிபாட்டுமரபைக் கவிதையிலே ஆவணப்படுத்தியுள்ளாள். மாதங்களிலே மிகவும் குளிர்மையானது மார்கழிமாதம். இயற்கையின் இயக்கநிலைக்கேற்ப வாழ்வியல் நடைமுறைகளை வகுத்துக் கொண்டு வாழ்வதே இயல்பானது. அந்த இயல்பு வாழ்க்கையைத் திட்டமிட்டுக் கொடுத்தவள் ஆண்டால் என்றால் மிகையாகாது. கோயில் வழிபாட்டு மரபு, சமூக அங்கத்தவர் அனைவரையும் ஒன்றிணைக்கும் பொது இடமாக விளங்கிய, ஆண்டாள் காலத்தில் அவள் ஒரு புதிய மரபையும் தொடக்கிவைத்தாள். நாடும் வீடும் வாழவேண்டி நோன்பு நோற்று வழிபட வழிகாட்டினாள். 'பாவைநோன்பு' எனப் பெண்களால் பேணப்பட்ட வழிபாட்டுமரபு காலத்தால் அழியாத பண்பாடாக நின்று நிலைக்க ஆண்டாள் கவிதை மாலை ஒன்றை ஆக்கினாள்.

திருப்பாவைப்பாடல்களில் பெண்கள் செய்த வழிபாட்டு நடைமுறைகள் செம்மையாகக் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. ஆயர்பாடியில் வாழும் சிறுமிகளும் கன்னிப் பெண்களும் ஒன்றிணைந்து செய்த வழிபாட்டின் பயன் மனித விழுமியங்களை உணர்த்துவதே. எனவே 30 பாடல்களில் ஒரு முழுமையான பயனை அடைய வழிகாட்டும ஆண்டாள் பாடிய கவிதை மாலை ஐம்புலன்களையும் ஐம்பொறிகளையும் இயற்கையுடன் இணைத்த செயற்பாடாகவே விளங்குகின்றது. பெண்களை அவள் ஒருங்கிணைக்கும் போது பயன்படுத்திய சொற்கள் கவிதை மாலையில் இனிய மணம் வீசும் மலர்கள், நேரிழையீர்!, செல்வச் சிறுமீர்கள்!, பிள்ளாய்!, பேய்ப் பெண்ணே!, பாவாய்!, மாமன்மகளே!, பொற்கொடியே, புனமயிலே தங்காய்!, செல்வப் பெண்டாட்டி! நங்கைமா்!, எம்பெருமாட்டி!, மருமகளே! என அவள் ஏற்ற உறவும் தொடர்பும் கூறி அழைக்கும் தன்மை சமூக நிலையான ஒருங்கிணைப்பை வழிப்பாடு தரும் என்ற நம்பிக்கையை ஊட்டுகிறது.

பெண்களின் குண இயல்புகளை மனத்துள்வாங்கி, வார்த்தைகளால் மாலையாக ஆண்டாள் தொடுத்துக் காட்டுவது அவள் புலமைச்சிறப்புக்குச் சான்றாக உள்ளது. பெண்கள் மனத்துள் இருக்கும் உணர்வுகளையெல்லாம் உள்ளே புகுந்து அள்ளி வந்து சொல்லோவியமாய் வரைந்துள்ளாள். நோன்பின் திறத்தை வையத்தில் வாழும் அனைவரும் அறியச் செய்துள்ளான். இன்றைய நவீன தொழில்நுட்ப தொடர்பாடல் கருவிகள் எதுவும் இல்லாத ஆண்டாள் காலத்தில் அவள் இசைமாலையே வாய்மொழியாகப் பரவியது.

**'நெய்யுண்ணோம், பாலுண்**
**ணோம் நாட்காலே நீராடி**
**மையிட்டெழுதோம் மலரிட்டு**
**நாம் முடியோம்**
**செய்யாதன செய்யோம் தீக்**
**குறளைச் சென்றோதோம்...'**

நோன்பின் நடைமுறைகளை ஆண்டாள் சொல்லும் போது ஐம்புலன்களையும் ஐம்பொறிகளையும் வென்றெடுக்கவும் வழிகாட்டுகிறாள். இந்த நோன்பினால் எல்லாப் பெண்களும் ஒரே இலக்குடன் செயற்பட அதன் பயன் என்ன என்பதையும் சுருக்கச் செய்தியாக ஆண்டாள் கூறிவிடுகின்றாள்.

'நாங்கள் பாவைநோன்பு நோற்றால் தீங்கின்றி நாடெல்லாம்
திங்கள் மும்மாரி பெய்யும்,
செஞ்நெல் வயல் விளையும்,
பெரும் பசுக்களின் வளம் பெருகும்'

பெண்களின் வழிபாட்டால் செல்வம் பெருகி நாடுவளம் பெறும். இந்த வழிபாட்டுமரபு எப்போதும் நிலைபெற்றிருக்க வேண்டுமென வரம் கேட்கும் ஆண்டாள், வீட்டிற்கும் நாட்டிற்கும் பெண்கள் ஆற்றக் கூடிய உன்னதமான பணியை தமிழ் மொழியால் நயம்பட எடுத்துரைத்துள்ளாள்.

ஆண்டாள் பாடிய நாச்சியார் திருமொழி வழிபாட்டு நிலையில் உணர்வுகளை நெறிப்படுத்த முயல்கிறாள். அதற்குத் தனது அனுபவத்தையே பாடல்களில் பொதிந்துள்ளாள். பெண்மையின் இளமைக்குண நிலைகளையெல்லாம். ஒழிவுமறைவின்றிக் கூறுகிறாள். கண்ணனை அடையவிரும்பிக் காமனைத் தொழுகிறாள். தெய்வத்தின் அருளைப் பெறச் செய்யவேண்டிய முயற்சிகளை அவள் வரிசைப்படுத்திப் பக்தி மாலையாக்கியுள்ளாள். பெண்மையின் கற்பனை வாழ்வியல் நினைப்புகளையும் ஆண்டாள் தனது உள்ளத்திலே தேக்கிவைக்காமல் கவிதையிலே வெளிப்படுத்தும் பாங்கு புதுமையானது. தை, மாசி, பங்குனி என்னும் மூன்று மாதங்களிலும் செய்கின்ற வழிபாட்டு நடைமுறைகளை ஆண்டாள் வரிசைப்படுத்திச் சொல்லும் போது பெண்களின் கடமைகளையும் பேசுகிறாள். தைமாதம் தரையை விளக்கி கோலம் போடும் நடைமுறையை ஆண்டாளின் கவிதை எனும் ஒளிப்படக்கருவி அழகாகப் படம் பிடித்து வைத்துள்ளது. மாசி மாதத்தில் வெண்மணல் கொண்டு வீதியை அழகுபடுத்தும் பண்பும் எரி ஓம்புதலும் முருக்க மலர் கொண்டு முப்போதும் தொழும் நிலையும் சுவரில் இறைவன் பேரெழுதி வழிபடும் தன்மையும் பண்டைய வழிபடும் மரபு பற்றிக் கூறுகிறது.

உணர்வு நிலையிலே மனித உடல் வளர்ச்சிக்கு ஏற்பத் தோன்றும் மாற்றங்களை ஆண்டாள் உன்னிப்பாகவே பாமாலையிலே காட்டுகிறாள். சிறுமியாக இருக்கும் பருவத்தில் சிற்றில் கட்டி விளையாடுவதையும் குமரிப்பருவத்தில் கோலச்சிற்றாடை அணிந்ததையும் அவள் குறிப்பாய்க் காட்டி உணர்வு நிலை மாற்றத்தையும் நயமாகக் காட்டியுள்ளாள். இளம் பெண் தன் உள்ளக்கருத்தை உரியவனிடம் தெரிவிப்பதற்குத் தூதனுப்பும் நிலையை ஆண்டாள் கூறும் போது அக்காலத்துத் தகவல் தொடர்பு இயற்கையுடன் ஒன்றியிருந்ததை உணர முடிகிறது. மனதுக்குப் பிடித்தவரை மணம் புரிய விரும்பும் பெண்ணின் உள்ளத்திலே அவரையே திருமணம் செய்யவேண்டும் என்ற உறுதிப்பாடு இருக்கும். அதனால் அவளுடைய கனவிலே திருமணம் நடைபெறுவதாகக் கவிதைமாலையை ஆண்டாள் தொடுத்துள்ளாள்.

மணவறையிலே மணமகன் புகுதல், மாலை சூட்டல், காப்புக் கூட்டல், கைத்தலம் பற்றல், தீவலம் செய்தல், அம்மிமிதித்தல், பொரி முகம் தட்டல், மஞ்சனமாட்டல், மங்கலமானவீதிவலம் என இன்று நடைபெறும் திருமண நடைமுறைகளின் மூலப்பொருளை ஆண்டாள் கவிதை மாலையால் அறிய முடிகிறது. ஆண்டாள் கவிதையில் உள்ளத்து உணர்வுகளை வடிக்கும்போது அதை உள்ளவாறு கூறும் பண்பு நிலை பேணுகிறாள். கண்ணனின் திருப்பவளச் செவ்வாயின் வாய்ச்சுவையும் நாற்றமும் அறிய வேண்டி அவன் கையில் இருக்கும் சங்கிடம் கேட்பதாக அவள் பாடிய பதிகம் தமிழ்க் கவிதை மரபில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தியது. மானிடக்காதல் உணர்வுகளைத் தெய்வத்தின்மேல் கொண்டகாதலுணர்வாக அவள் பாடியது ஆணடாளின் ஒப்பற்ற காதல் நிலை. அதுவே மானிடக்காதலையும் தெய்வீகக் காதலையும் ஒன்றெனக் கருதும் உயர்ந்த பக்திநிலையின் தத்துவமானது. ஒருவனுக்கு ஒருத்தி எனவும் ஒருத்திக்கு ஒருவன் எனவும் வரையறை செய்யப்பட்ட வாழ்வியலை நிலைபெறச்செய்ய அதை பேராற்றல் படைத்த இறையன்போடு இணைத்துவிட்டாள். மனித உள்ளத்திலே என்றும் மறையாத அழியாத காதலாக அதை ஆக்கிய பெருமை ஆண்டாளையே சாரும். பெரியாழ்வாரின் வளர்ப்பு மகள் அவருடைய வழிபாட்டுத் தத்துவத்தை எல்லோரும் எளிதாய் உணர ஒரு புதிய பக்தி மரபைத் தொடக்கிவைத்தாள். மானிடக்காதலைவிடத் தெய்வீகக் காதலின் ஆழத்தை ஆண்டாள் பாமாலையால் விளக்கினாள். அவளுடைய வழிபாட்டு நெறி கவிதையாற்றலால் பதிகப் பாமாலைகளாகிற்று.

இன்று பக்தியின் மொழி தமிழ் என்று விருந்து பேசுவோர் ஆண்டாளின் பாமாலையைப்படிக்கும் போது புதிய அனுபவத்தைப் பெறுவர். வழிபாட்டு நடைமுறைகளும் பக்தியுணர்வும், காதல் நிலையும் மொழிவழியாகப் பரவ ஆண்டாள் தமிழ்ப் பணி செய்துள்ளாள். நாயகன் நாயகி பாவத்தில் பெண்மையின் குணநலன்களை ஆண்டாள் பாடிய நயம் தமிழ்மொழியின் ஆற்றலுக்கோர் எடுத்துக்காட்டு. கோவில்களிலெல்லாம் உறையும் தெய்வத்தின் தோற்றப்பொலிவையும் அருட்சிறப்பையும் ஆற்றலையும் கவிதையிலே கூறும் மரபுக்கு ஆணடாள் புதிய வளம் சேர்த்தாள். பிருந்தாவனத்திலே கண்ணனைக் கண்டதாக ஆண்டாள் பதிகம் நிறைவுறுகிறது. கோதை எனப் பெரியாழ்வார் பெயர் சூட்ட சூடிக் கொடுத்த சுடர்க்கொடியாக வளர்ந்து ஆண்டாளாக மலர்ந்து நாச்சியராக நிறைவு பெற்ற ஒரு பெண்மையின் வாழ்வியல் நாலாயிரத்திவ்வியப் பிரபந்தம் என்னும் தொகுதிப்பு நூலில் காலத்தை வென்ற பாமாலைகளாக நிலைத்து நிற்கும் என்பதில் ஐயமில்லை.□

# இரத்ததானம் செய்வதிலும் இனப்பாகுபாடு காட்டப்படுகிறது

(அம்பாறை)

அம்பாறை ஆதார வைத்திய சாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்ட தமிழ் பேசும் நோயாளிகளுக்கு இரத்தம் தேவைப்படும் போது தமிழ் பேசுபவர்களிடம் இருந்து பெறப்பட்ட இரத்தமாகவே இருக்கவேண்டும் என இரத்த வங்கியினர் தெரிவிப்பதாக இப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதனால் தமிழ் பேசும் அவசர சிகிச்சை பெறும் நோயாளர்கள் சிரமத்தை எதிர்நோக்குவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அம்பாறை ஆதார வைத்திய சாலையில் மகப்பேற்றுப் பிரிவிலும மற்றும் அவசர சத்திரசிகிச்சைப் பிரிவிலும் அனுமதிக்கப்படும் குறிப்பாக முஸ்லிம் இனத்தைச் சேர்ந்த பல்வேறுபட்ட நோயாளர்களுக்கு அவசரமாகத் தேவைப்படும் இரத்தத்தை வங்கியிலிருந்து வழங்கப்பட்டாலும் அவற்றிற்கு மாற்றீடாக வங்கிக்கு செலுத்தவேண்டிய இரத்தத்தைப் பெறுவதற்காக அண்மையிலுள்ள பெருமபான்மை இனத்தைச் சேர்ந்தவர்களை அழைத்துச் சென்றால் வங்கி ஊழியர்கள் மறுப்புத் தெரிவித்துத் தங்களது இனத்தைச் சேந்தவர்களை அழைத்து வருமாறு கட்டாயபபடுத்துகின்றனர்.

இதனால் அவசரவ சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு சுகமடைந்தவர்களை உரிய நேரத்தில் வீட்டுக்கு அழைத்துச் செல்ல முடியாமலும், உரிய நேரத்தில் உரிய இனத்தைச் சேர்ந்தவர்களின் இரத்தத்தைப் பெற்றுக் கொள்ள முடியாமலும் உறவினர்கள் பெரும் திண்டாட்டம் அடைகின்றனர்.(க-9)

# "ஞானச்சுடர்" வெளியீடு

(துன்னாலை)

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினரால் மாதந்தோறும் வெளியிடப்படும் ஞானச்சுடர் மலரின் மார்கழி மாத வெளியீடு எதிர்வரும் 31 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மு.ப. 10.30 மணிக்கு வெளியிடப்படவுள்ளது.

ஸ்கந்தவரோதயக் கல்லூரி ஆசிரியர் கே.எஸ்.சிவஞானராஜா வெளியீட்டுரையையும் பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலை அதிபர் ஆ.ஸ்ரீஸ்கந்தமூர்த்தி பதிப்புரையையும் வழங்குவர். (க-101)

## மீள் பார்வை

# யாழ்ப்பாணத் தமிழரசர் வரலாறும் காலமும்

வேலணை பண்டிதர் பொ.ஜெகந்நாதன் 21

## 16.பாண்டிமழவன் அழைத்து வந்த சோழ இராசகுமாரன்

இல்லாதிச் சிங்கையாரியனைச் சிலர் பாண்டியன் என்கின்றனர். சிலர் சோழன் என்கின்றனர். சிலர் ஒன்றினையும் துணிய இயலாதிருக்கின்றன்றனர், யாம் ஈண்டு நிச்சயிப்பாம். அவ்வாரியன் [illegible] தன் மகனுக்கு தன் இராச்சியத்தை முடிசூட்டி வைத்துச் சிவபதம் சார்ந்தான் என்று வைபவமாலை சொல்லி இருக்கேயல்லவா அவன் பெயர் குலசேகரசிங்கையாரியன் என்று அந்நூலால் சொல்லப்பட்டிருக்கல்லவா. இப்பெயரை அவனுக்கிட்டவன் அவன் தந்தையல்லவா அவன் தன் குலத்தவர் அனுசரித்து வந்த பெயரைத்தானே தன் மைந்தனுக்கு இட்டிருப்பான். எனவே இம் மைந்தன் பெயரைக் கொண்டும் அவன் தந்தை எக்குலத்தவன் என்றும் நிச்சயமாக அறிந்துவிடலாம் அதன் கூற்று வருமாறு.

சிங்கள கலகத்துக்கு எடுபடாமல் காலம் விட்டுவத்த பொன் பற்றியூர் வேளான் பாண்டி மழவன் என்னும் பிரபு மதுரைக்குப் போய் அவ்விடத்திலே சோழ நாட்டிலிருந்த திசையுக்கிர சோழன் மகனாகிய சிங்ககேதுவுக்கு மருமகனான சிங்கையாரியன் என்னும் சூரியவம்சத்து இராசகுமாரனைக் கண்டு யாழ்ப்பாணத்தின் நிலைபரத்தை அறிவித்து இவ் யாழ்ப்பாணத்தை அரசாட்சி செய்ய வேண்டுமென்று கேட்க சிங்கையாரிய அரசன் மறுத்துப் பேசாமல் பாண்டி மழவன் கேள்விக்குடன்பட்டு (கல்வியறிவிலும் புத்திவிவேகத்திலும் எவர்களும் வியந்து கொள்ளத்தக்க உத்தண்ட வீரசிகாமணியாகிய புவனேகவாகு என்னும் மந்திரியையும் காசிநகரத்திலிருந்து வந்த வேதிய குலோத்துங்கனாகிய கெங்காதர ஐயரென்னுங் குருவையுங் கொண்டு தனது பரிவாரங்களுடன் பிரயாணப்பட்டு பாண்டியரசன் வழிவிட்டனுப்பி வைக்க யாழ்ப்பாணத்தில் வந்திறங்கி நல்லூர்ப் பகுதியிலே ... கிருகப்பிரவேசஞ் செய்திருந்தான்- (யா.வை.மா. பக்.25-26) வந்து தலைநகர் அமைத்தான் என்று சொல்லியுள்ளது.

எனவே சோழ அரசன் பாண்டிய நாட்டில் கல்வி கற்றுக்கொண்டிருந்தவன் ஆனால் பாண்டிய அரசனல்ல. ஆதிச்சிங்கையாரியவன் பாண்டியனா சோழனா என்பது அவன் தன் மைந்தனுக்கிட்ட பெயர் கொண்டறியலாம். மைந்தனுக்கு குலசேகரசிங்கையாரியன் என்று பெயர் வைத்திருக்கிறான். இதைக் கொண்டு ஆதிச்சிங்கையாரியன் சோழகுலத்தவன் என்று தெரிகிறது. இது சோழகுலத்துப் பெயரைத் தழுவியது அந்த முதல் பெயர்களைக் கொண்டவைகளாகத் தான் இன்றும் இவன் குலப்பின்னவர்கள், குலோத்துங்கன், விக்கிரமன், கனகசூரியன் எனத் தங்கள் பெயரை வைத்துக்கொண்டார்கள் இவ்வுண்மையை சோழர் சரித்திரத்திலறிந்து கொள்க.

இனிப் பாண்டியர் பெயர்களை R.அரிகரமையர் (தலைமைத்தமிழ் பண்டிதர் தீர்த்தபதிக்கலாசாலை அப்பாசமுத்திரம்) எழுதிய பாண்டிய ராசவம்ச சரித்திரம் எனும் நூலில் காண்போம். பாண்டியன் வடிவம்பலம் நின்றவன், பாண்டியன் வெள்ளியம்பலத்துஞ்சிய பெருவழுதி, பாண்டியன் இலவந்திகைப்பள்ளி துஞ்சிய நன்மாறன் எனவே பாண்டியன், வழுதி, மாறன், செழியன் என்னும் பெயர்களில் ஏதாவதொன்றும் அச் சிங்கையாரிய குலத்தவர் பெயரோடு தொடரவில்லை. ஆகையால் ஆதிச்சிங்கையாரியன் பாண்டியன் அல்ல அவனைச் சோழ குலத்தவன் பாண்டிய நாட்டிலே இராசவுத்தி யோகக்கல்வி கற்றுக் கொண்டிருந்தவன் என வரையறையாகச் சொன்ன வைபமாலையை நாம் வியக்கின்றோம் இன்னும் கேட்க.

வைபவமாலையார், பாண்டிமழவன் போய்க் கேட்ட இராசகுமாரனை விபரிக்குமிடத்து அவன சோழநாட்டிலிருந்து வந்து மதுரையிலே இராசவுத்தியோகத்துக்கேற்ற கல்வி கற்றுக் கொண்டிருந்தவன் எனவும் சோழன் மகனாகிய சிங்ககேதுவுக்கு மருமகனான சிங்கையாரியன் என்று சொல்லியிருக்கிறார் அல்லவா எனவே அவன் சோழன் என்று துணிக. அப்பாலும் ஐம்கிளம்பு மேல் சூரியவம்சத்து இராசகுமாரனைக்கண்டு என்று சொல்லி இருக்கிறாரே உலக வழக்கிலும், நூல்வழக்கிலும் சோழரைச் சூரியகுலம் என்றும் ,பாண்டியரைச் சந்திர குலமென்றும் சொல்லும் வழக்கம் இருக்கு. அவ்வகையிலே அவனைச் சோழனென்றே துணிந்து கொள்க. அங்ஙனம் சரியாயினும் அவன் பாண்டிநாட்டு மதுரையில் உள்ள சொக்கநாதரை வழிபட்ட செய்தி இக்கோட்பாட்டுக்கு கூறுவிளைக்காதோவெனின் இல்லையே இவ்வரசரான "ஜெயசிங்கையாரியனாம் செய்யகுலராசன், நயந்து புவியாண்டிருக்கு நாளில் வியந்த மதுரைநகர்ச் சொக்கர் மலர்ப்பாதம் போற்றி, இதயத்திரவு பகலெய்தி, விதனமுறும் அக்கவின் கோயிலமைத்துப் பிரதிட்டை செய்து, சொக்கலிங்கமென்று பெயர் சூட்டுமென்ன மிக்க மனநினைவின் மன்னன் மதித்து மஞ்சமீதிற் ,புனைதுயிலாய் மேவியிடும்போது (கை.மா.கண்.10-15)"

இப்பகுதிக்குரை செய்தவர் உரையாவது இவ்வாறு ஆகவேண்டிவை எல்லாம் சிங்கையாரியன் அமைத்து முடித்து இரவும் பகலும் மதுரை சொக்கநாதர் திருப்பாதங்களையே சிந்தித்து அரசாண்டு வருகையில் யாழ்ப்பாணத்திலே (நல்லூரிலே) சொக்கநாதர் கோயிலமைக்க விரும்பி அவ்வாறு செய்வதென ஒருநாள் தீமானித்தான் (கை.மாலை. பக். 28) இவன் முன் இராசவுத்தியோகத்துக்கேற்ற கல்வி கற்க மதுரைக்குப் போயிருக்கிறான். அங்கே 10-15 வருட காலம் தங்கி அக்கல்வியைக் கற்கும் காலத்திலே மதுரைச் சொக்கரை வழிபட்டிருக்கிறான். அவன் பின்னர் யாழ்ப்பாணத்து நல்லூருக்கு வந்து அச் சொக்கநாதர்க்கு ஒரு கோயில் கட்டி வழிபட எண்ணி இருக்கிறான். அச் சந்தர்ப்பத்திலே தான் கைலாயநாதன் உமாதேவி சகிதம் போய்க் காட்சி கொடுத்து என்னை மறந்தனையோ என்று கேட்டார். என்க இன்னும் ஒன்று அரசர் பெயர் வைப்பது சிந்தித்துச் செய்யப்படும் விஷயம் பாண்டியன் சோழ இனத்தார் பெயரையோ சோழன் பாண்டிய இனத்தவர் வைக்கும் பெயரையோ வையான் எனவே சிங்கையாரியன் சோழனே என்க.

## 17.பிறர்கண்ட சிங்கைநகர்

"ஆதி ஆரியச்சக்கரவர்த்தி கட்டிய யாழ்ப்பாணம் நகரி யாது? அது நல்லூராதல் கூடுமா கூடாதென்பர் ஸ்ரீ இராசநாயக முதலியார். இவ்வியுற் பத்திமானின் அனுமானப்படி பருத்தித்துறைக் கணித்தாய் மணல் மேடுகள் பொருந்தி இருக்கின்ற வல்லிபுரமே பூர்வ காலச் சிங்கை நகராம். நல்லூர் புவனேகவாகுவெனப் பிற்படக் கோட்டை இராச்சியம் வகித்த செண்பகப்பெருமாள் பதினைந்தாம் நூற்றாண்டில் கட்டுவித்ததாம் இம் மதம் எனக்கும் சம்மதம். வல்லிபுர மணற்கும்பிகளுள் காற்றுக் காலங்களில் அகப்படும் பழம்பொருட்கள் அங்கு சிலவிடங்களில் குவிந்து கிடக்கின்ற பூர்வகாலக்கலவோடுகள் கீச்சுக்கிட்டம் ஆதியனவும் அங்கிருந்து கரை மார்க்கமாகப்போன பெருவீதியின் அடையாளங்களும் ஒருநாள் அது விஸ்தாரநராய் விளங்கியதெனக்கரதல ஆமலகமாய்க் காட்டும் "அப்பால் ஆரியச்சக்கர வர்த்திகள் தம் செல்வாக்கு நிரம்பிய நாட்களில் பெருங் கப்பற்படையுள்ளோராய்ப் பிரக்கியாதி பெற்றுள்ளமையால் அம்மரக் கலத்திரள் ஆழியிற் சுலபமாய்ச் சென்று திரும்புதற்கனுகூலமான துறைமுகம் உள்ளோராய் இருந்தமை அவசியம் கேகாலைப் பகுதியில் உள்ளகொத்தகமத்திற்கன் நகர் ஆரியர் என்று சூசிப்பிக்கிறது. பெருங்கடற் சமீபமும்சிறந்த துறைமுகம் பொலிவும் கொண்டது வல்லிபுரமே. அங்கு நற்றுறையுண்டோ என இராச சாயகமுதலியார் கொண்ட ஐயுறவு எம்மால் இனிது தீர்க்கப்படாது. (தொடரும்)

## சாவ.வைத்தியசாலையில் பற்சிகிச்சைப் பிரிவு அங்குரார்ப்பணம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலையில் மீண்டும் பற்சிகிச்சை நிலையம் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

இன்று திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு யாழ். மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் இ. தெய்வேந்திரத்தினால் இப் பற்சிகிச்சை நிலையம் வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

கடந்த கால யுத்தத்தின் போது வைத்தியசாலை முற்றாக சேதமடைந்து காணப்பட்டது. பின்னர் படிப்படியாக இவ் வைத்தியசாலையின் ஒவ்வொரு பகுதியும் இயங்க ஆரம்பித்திருக்கின்றது.

அண்மையில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்ட சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலை அபிவிருத்திச் சபையின் முயற்சியினால் இதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

(ப-47,9,127)

## எரிபொருட்களின் விலையை அதிகரிக்கும் எண்ணமில்லை

### பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அறிவிப்பு

(கொழும்பு)

உலக சந்தையில் எரிபொருட்களின் விலை ஓரளவு அதிகரித்துள்ள போதிலும் இலங்கையில் அவற்றின் விலையை அதிகரிக்க வேண்டிய அவசியம் ஏற்படவில்லையென பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது.

அதன் தலைவர் ஜாலிய மெதகொட இது தொடர்பாக கருத்துத் தெரிவிக்கையில், எரிபொருள் விற்பனையில் நட்டத்தையே கூட்டுத்தாபனம் எதிர்நோக்கி வருகின்றது.

ஒரு லீற்றர் டீசலின் விலை 52 ரூபாவாக இருந்த போதிலும் அது 42ரூபாவிற்கு விற்கப்படுகிறது.

உலக சந்தை விலை அடிப்படையில் ஒரு லீற்றர் மண்ணெண்ணெய் 42 ரூபாவாக விற்கப்பட வேண்டியுள்ள போதிலும் அது 25 ரூபா 50 சதமாக விற்கப்படுகிறது.

இதே போன்று பெற்றோல் விற்பனை மூலமும் கூட்டுத்தாபனத்திற்கு இலாபம் கிடைப்பதில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (க-7)

## புதியஅலுவலகம் திறந்து வைப்பு





யாழ். செயலகத்தில் வடக்கு- கிழக்கு வீடமைப்பு புனர் நிர்மாணத் திட்டத்திற்கான புதிய அலுவலகம் நேற்று முன்தினம் யாழ். மாவட்ட அரச அதிபர் செ.பத்மநாதனால் வைபவ ரீதியாகத் திறந்து வைக்கப்பட்டது.

யாழ். மாவட்ட உதவித்திட்டமிடல் பணிப்பாளர் வே. சாம்பசிவம் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில், மங்கள விளக்கினை யாழ். மாவட்ட அரச அதிபர் செ. பத்மநாதன்,மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி, புனர்வாழ்வுத் திட்டமிடல் பணிப்பாளர் பொ. சுந்தரம்பிள்ளை ஆகியோர் ஏற்றி வைத்தனர்.

அலுவலக பெயர்ப்பலகையை யாழ்.மாவட்ட மேலதிக அரச அதிபர் ஆ. சிவசுவாமி திரை நீக்கம் செய்து வைத்தார். இவ்வைபவத்தில் யாழ். மாவட்டத்தில் இயங்குகின்ற 17 பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் உதவிப்பிரதேச செயலர்களும், செயலக உயர் அதிகாரிகளும் கலந்து கொண்டனர். (ற-5)

# வெள்ளப்பெருக்கால் பாதிக்கப்பட்டோருக்கு உதவி வழங்க உடன் நடவடிக்கை எடுக்குக!

## அமைச்சர் றிஷாத், சுகாதார மற்றும் சமூகசேவை அமைச்சர்களிடம் வேண்டுகோள்

(புத்தளம்)

திடீரென ஏற்பட்ட கடல் கொந்தளிப்புடன் கூடிய வெள்ளப் பெருக்கினால் பாதிப்புக்குள்ளான மக்களுக்கான சுகாதார மற்றும் நிவாரண உதவிகளைத் துரித கதியில் செய்து கொடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளு மாறு வன்னி மாவட்ட புனர்வாழ்வு அபிவிருத்தி அமைச்சர் றிஷாத் பதியுதீன் சுகாதார மற்றும் சமூக சேவைகள் அமைச்சர்களிடம் அவசர வேண்டுகோள் விடுததுள்ளார்.

வட மாகாணத்தில் குறிப்பிட்ட பிரதேசங்களில் ஏற்பட்ட கடல் கொந்தளிப்பால் பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தேவையான உதவி களை உடனடியாகப் பெற்றுக் கொடுககுமாறு மன்னார், வவுனியா உள்ளிட்ட சகல அரசாங்க உயர் அதிகாரிகளுக்கும் அமைச்சர் றிஷாத் பதியுதீன் பணிப்புரை விடுத்துள்ளார்.

சேத விபரங்களை ஆராயும் பொருட்டு உரிய நடவடிக்கை களை எடுக்குமாறும் அமைச்சர் அவர்களிடம் கேட்டுள்ளார்.

கடல் கொந்தளிப்பால் பாதிக் கப்பட்ட வத்தளைப் பிரதேசத் திற்கு விஜயம் செய்த அமைச்சர் றிஷாத் பதியுதீன் பாதிப்புக்குள் ளான மக்களைச் சந்தித்து ஆறு தல் கூறியுள்ளார்.

குறிப்பாகப் புத்தளம், கறபிட்டி, மன்னார் கடல் பிரதேசத்தை அண்டி வாழும் மக்கள் பாதுகாப் பாக இருக்குமாறும் அமைச்சர் கேட்டுள்ளார். (ற-15)

## வீதிவிபத்துக்களைத் தடுக்க உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் தற்போது அதிகரித்து வரும் வீதி விபத்துக்களில் ஏற்படும் மரணங் களைத் தடுத்து நிறுத்துவதற்கு உரிய நடவடிக்கைகளை சம்பந் தப்பட்ட அனைத்துத் தரப்புகளும் உடனடியாக எடுக்கவேண்டும்.

இவ்வாறு யாழ்.மாவட்ட மனித நேய அமைப்புக்களின் மாவட்ட சமூக பாதுகாப்புக் குழுவின் மாதாந்தக் கூட்டத்தில் வேண்டு கோள் விடுக்கப்பட்டுள்ளது.

மேற்படி அமைப்பின் கூட்டம் வடமராட்சி உதவிக் கல்விப் பணிப் பாளர் எம்.சிறீபதி தலைமையில் யாழ்.மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இக்கூட்டத்தில் பங்குபற்றிய மனிதநேய அமைப்புக்களின் ஆர் வலர்களும், மனித உரிமை நோக்கு டையவர்களும் யாழ்.மாவட்டத்தில் அதிகரித்து வரும் வாகன விபத்துக களிலான மரணங்களைத் தடுத்து நிறுத்த சட்டஒழுங்குகளைக் கடு மையாக அமுல் செய்யவேண்டும் எனவும், தவறும் பட்சத்தில் வீதி விபத்துக்களால் ஏற்படும் மரணங் கள் மேலும் அதிகரித்துக் கொள் ளும் என்றும் சுட்டிக்காட்டினர்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் வாகனங்கள் வீதிகளில் உச்ச வேகத்திலேயே செலுத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்க தாகும். (க-16)

# மீண்டும் நேர் முகப்பரீட்சை

(திருகோணமலை)

வடக்கு -கிழக்கு மாகாண தமிழ்மொழி மூலப் பாடசாலை களில் நிலவும் ஆசிரியர் பற்றாக் குறையை தீர்க்கும் முகமாக கடந்த நவம்பர் 30 ஆம் திகதி தொடக்கம் டிசம்பர் 16 ஆம் திகதி வரை மாகாணக்கல்வி அமைச் சில் நடத்தப்பட்ட நேர்முகப்பரீட் சைக்குத் தோற்ற முடியாமல் போனோருக்கு இம்மாத இறுதி யில் மீண்டும் ஒரு சந்தர்ப்பத்தை வழங்குவதற்கு வடக்கு - கிழக்கு மாகாணக்கல்வி அமைச்சு முடிவு செய்துள்ளது.

திருகோணமலையில் டிசம்பர் மாத முற்பகுதியில் இடம்பெற்ற அமைதியின்மை இதன் பின்னர் கிழக்கில் ஏற்பட்ட பெருவெள்ளம் போன்ற காரணங்களினால் நேர் முகப் பரீட்சைக்கு அழைக்கப் பட்டவர்களில் 220 பேர் குறிப்பிட்ட தினங்களில் சமுகமளிக்கவில்லை. இவ் வாறானவர்களுக்கு மற்று மொரு சந்தர்ப்பம் வழங்கப்பட வுள்ளது.

நேர்முகப்பரீட்சைகளும் நடை பெற்று முடிந்த பின்னர் ஜனவரி மாதம் இரண்டாவது வாரத்தில் ஆயிரம் ஆசிரியர்களுக்கு நிய மனம் வழங்கப்படும் என மாகாணக கல்வியமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இவ்வாறு நியமனம் பெறுபவர் களில் 450 பேர் ஆங்கில பாடத் திற்கும், 350 பேர் ஆரம்பக் கல் விக்கும் நியமனம் பெறவிருக்கின் றனர். இந்நியமனத்தில் கடல்சார் கற்கைகள் தொடர்பான நியமன மும் முதன் முறையாக வழங்கப் படவிருக்கின்றது.

ஆசிரியர் நியமனம் பெறுபவர் கள் அனைவரும் க.பொ.த. உயர் தரத்தில சித்தியடைந்து பல்கலைக் கழக அனுமதிக்கான தகைமை களைப் பெற்றவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (க-9)

# வடக்கு-கிழக்கில் உள்ள 57 பாடசாலைகளில் ஆங்கில மொழி மூலம் பாடபோதனைகள்

## 2005 முதல் அமுலுக்கு வரும்

(திருகோணமலை)

வடக்கு - கிழக்கு மாகாணத் தில் உள்ள 57 பாடசாலைகளில் அடுத்த ஆண்டு முதல் ஆங்கில மொழி மூலமான பாடபோதனை கள் மேற்கொள்ளப்படவுள்ளதாக மேலதிக மாகாணக் கல்விப் பணிப் பாளர் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் புதிய கல்விச் சீர்திருத்தத்தின் கீழ் நாடளாவிய ரீதியில் தெரிவு செய்யப்பட்ட சில பாடசாலைகளிலேயே ஆங்கில மொழி மூலமாக பாடபோதனை கள் மேற்கொள்ளப்படவிருக்கின் றன.

இந்தத்திட்டத்தின் கீழ் தரம் 6 தொடக்கம் கல்விப் பொதுத்தரா தர உயர்தரம் வரை சகல பாடங் களும் ஆங்கில மொழிமூலம் கற் பிக்கப்படவிருப்பதாக மேலதிக மாகாணக்கல்விப் பணிப்பாளர் கூறியிருக்கின்றார்.

தேவையான ஆங்கில மொழி மூலமான பாட நூல்களை கல்வி அமைச்சின் உதவியுடன் கல்வி வெளியீட்டுத் திணைக்களம் அச் சிட்டு வெளியிட்டுள்ளது.

அந்தத் திட்டத்தின் கீழ் கற் பித்தல் நடவடிக்கைகளில் ஈடு படும் ஆசிரியர்களுக்கு விசேட பயிற்சிகளை கல்வியமைச்சு வழங்கியிருக்கின்றது.

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் 57 அரசாங்கப் பாடசாலைகளிலும் 4 தனியார் பாடசாலைகளிலும், பரீட்சார்த்த அடிப்படையில் ஆங் கில மொழிமூலமான பாடபோத னைகள் ஆரம்பிக்கப்படவிருக்கின் றன. (9)

# குழந்தைகளின் ஆயுட்காலம் வரையும் பயன்படும் வகையில் வளர்ச்சிப்பதிவேடு

குழந்தைகளிற்கான வளர்ச்சிப் பதிவேட்டை நவீன முறையில் வடிவமைத்து ஓர் பிள்ளையின் ஆயுட்காலம் முழுவதும் அதைப் பேணுவதற்கு வசதியாக அது தயாரிக்கப்பட்டுள்ளதாக சுகாதா ரப்போசாக்கு நலன்புரி அமைச் சின் குடும்பத்திட்டப் பணியகம் தெரிவித்துள்ளது.

தற்போது இவ்வளர்ச்சிப் பதி வேடு வைத்தியசாலைகளில் பிள்ளை பிறந்ததும் வழங்கப்பட்டு ஐந்து வயதுக்குட்பட்ட காலத்தில் மட்டும் பிள்ளையின் வளர்ச்சி மற்றும் விருத்தி போன்ற விடயங் கள் ஆவணப்படுத்தப்பட்டு வந்தது. பின்னர் பிள்ளை பாடசாலைக்குச் சென்றதும் அங்கு வைத்து மாணவர் வளர்ச்சிப் பதிவேடு என வேறொரு அட்டை பேணப்பட்டு வருகின்றது.

இவை திருப்தியற்றதாகக் காணப் படுவதை அடுத்தே சுகாதார அமைச்சு இப் புதிய அட்டையை வடிவமைத்து வருகின்றது.

இவ்வளர்ச்சிப் பதிவேடு சுமார் ஐம்பது பக்கங்களைக் கொண்ட தாக வடிவமைக்கப்பட்டு ஒரு பிள் ளையின் சகல செயற்பாடுகளை யும் மிகத் தெளிவாகவும் நுட்ப மாகவும் அவதானிப்பதற்கு ஏற்ற வகையில் வடிவமைக்கப்பட்டுள் ளதாகவும் தெரிவிக்கப்படுகின் றது. (ப-252)

# செய்தித் துளிகள்

## புங்குடு தீவில் மாபெரும் மனித சங்கிலிப் போராட்டம்

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு மகாவித்தியால யத்தின் அருகில் உள்ள வீதியின் இரு மருங்கிலும் நாளை செவ் வாய்க்கிழமை மாபெரும் மனித சங்கிலிப் போராட்டம் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

பேச்சுக்கு வரமறுத்து போருக் குத் தயாராகும் அரசின் போக் குக்கு எதிராக தீவுப்பகுதி மக்கள் ஒன்றுதிரண்டு எதிர்ப்புக் காட்டும் நிகழ்வாக இந்நிகழ்வு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

இப் போராட்டம் புங்குடுதீவு பொது நிறுவனங்களால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. (க)

## மகஜர் கையளிப்பு

(கல்வியங்காடு)

யாழ்.பல்கலைக்கழக வெளி வாரி காலை முதற்தேர்வு மாண வர்கள் தமது பரீட்சைகள் நடை பெற்று ஒன்றரை வருடகாலமாகி யும் பெறுபேறுகள் வெளியிடப் படாததைக் கண்டித்து வெளிவாரி மாணவர்கள் மகஜர் கையளிக்க வுள்ளனர்.

பல்கலைக்கழகத் துணை வேந்தருக்கான மகஜரை இன்று திங்கட்கிழமை நேரடியாகச் சென்று கையளித்து அதற்கான காரணத் தையும் வெளிவாரி மாணவர் ஒன் றியத்தினூடாகக் கேட்கவுள்ள னர். (க-74)

## திருவாசக விழா

(யாழ்ப்பாணம்)

இந்து சமய கலாசார அலுவல் கள் திணைக்களத்தின் யாழ். மாவட்ட அலுவலகம் நடாத்தி வரும் திருவாசக விழாவில் நாளை செவ்வாய்க்கிழமை காலை 11.00 மணிக்குக் கைதடி வீரகத்தி விநா யகர் ஆலயத்தில் இவ்விழா நடை பெறவுள்ளது.

இந்நிகழ்வில், யாழ்.பல்கலைக் கழக மாணவன் ச.பாலசண்முகன் "திருவாசகத்தேன்" எனும் விடயம் பற்றியும், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் சிவத்தமிழ் வித்தகர் சிவ மகாலிங்கம் "துணை யிலி பிண நெஞ்சே" எனும் விட யம் பற்றியும் சொற்பொழிவாற்ற வுள்ளனர். (ற)

## சைக்கிள் திருட்டு

(யாழ்ப்பாணம்)

கல்வியங்காடு சந்திப் பகுதி யில் நேற்று முன்தினம் நண்பகல் சைக்கிள் ஒன்று திருட்டுப் போயுள் ளது.

பூட்டிய நிலையில் நிறுத்தப் பட்டிருந்த சைக்கிளே திருட்டுப் போயுள்ளது.

சைக்கிளை வீதியோரமாக வெளியே நிறுத்திவிட்டு சந்தைக் குச் சென்று விட்டு 15 நிமிடத்திற் குள் வீடுசெல்வதற்காகத் திரும்பி வந்த போதே சைக்கிள் திருட்டுப் போயுள்ளமை தெரியவந்தது.(ற-8)

## ஒப்படைக்குக!

(யாழ்ப்பாணம்)

கிழக்கு மாகாணத்தில் வெள் ளத்தினால் பாதிக்கப்பட்ட மக் களுக்கு உதவும் முகமாக உணவு, உடை, மருந்துப் பொருட்கள் சேகரிப்பில் ஈடுபடுமாறு இதனை ஒழுங்குபடுத்தும் ஒருங்கிணைப் புக் குழுவினர் கேட்டுள்ளனர்.

சேகரிக்கப்பட்ட பொருட்களை இன்று பிரதான வீதி மடத்தடியில் உள்ள யாழ்.மாவட்ட விவசாய நுகர்ச்சி கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தில் ஒப்படைக்குமாறும் கேட்கப்பட்டுள்ளது. (ற-8)

## ஒளி விழா

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை பங்கு மக்களின் ஒளிவிழா ஆலயப் பங்குத்தந்தை அருட்திரு அன்ரனி ஞானப்பிர காசம் அடிகள் தலைமையில் நாளை செவ்வாய்க்கிழமை ஊர் காவற்றுறை புனித மரியாள் கலை அரங்கில் மாலை 6.00 மணிக்கு நடைபெறவுள்ளது. (க)

★ ★ ★

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு தென்னிந்தியத் திருச் சபையின் முன்பள்ளி ஒளிவிழா இனறு மாலை 4.00 மணிக்கு புங் குடுதீவு தென்னிந்தியத் திருச் சபை வளாகத்தில் நடைபெறும்.

இந் நிகழ்வு திருச்சபைப் பொறுப்பாளர் ஏ.ஆர்.அம்பலவாணர் தலைமையில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக யாழ். மாவட்டப் பாராளுமன்ற உறுப்பி னர் ந.ரவிராஜூம், சிறப்பு விருந்தி னர்களாக அருட்தந்தை ஆர்.ஜோன செல்வம், அருட்தந்தை டீ.ஆர்.அம் பலவாணர் ஆகியோரும் பங்குபற்ற வுள்ளனர். (க)

# பாடசாலை பற்சிகிச்சை நிலைய ஆசிரியர்கள் இடமாற்றம்

(சுதுமலை)

வடக்கு - கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பிரிவின் கீழ் இயங்கும் பாடசாலைப் பற் சிகிச்சை நிலையங்களில் கடமை புரியும் பாடசாலை பற்சிகிச்சையா ளர்களின் வருடாந்த இடமாற்றங் களைக் கடந்தவாரம் வெளியிட் டுள்ளது.

இவ் இடமாற்ற உத்தரவுகளை எதிர்வரும் ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்து மாறும் வடக்கு-கிழக்கு மாகாண சுகாதாரப் பணிப்பாளர் S.குமார வேல்பிள்ளை கடிதம் மூலம் அறி வுறுத்தியுள்ளார்.

இதன் பிரகாரம் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் இயங்கும் பாடசாலை பற்சிகிச்சை நிலை யத்தில் கடமைபுரியும் திருமதி சோபனா தயாபரன் வேலணைப் பாடசாலை பற்சிகிச்சை நிலையத் திற்கும், வேலணையில் கடமை புரியும் திருமதி அனஸ்ரா பொன் கலன் யாழ்.மத்திய கல்லூரி பாட சாலை பற்சிகிச்சை நிலையத்திற் கும் மானிப்பாய் இந்துக் கல்லூரி யில் இயங்கும் பற்சிகிச்சை நிலை யத்தில் கடமைபுரியும் கௌரி நடராசா கிளிநொச்சி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு பற் சிகிச்சை நிலையத்திற்கும் கிளி நொச்சியில் கடமை புரியும் திரு மதி எம்.ராஜதுரை மானிப்பாய் இந்துக்கல்லூரிப் பாடசாலை பற் சிகிச்சை நிலையத்திற்கும் இட மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ப-252)

# திறப்பு விழா

(பருத்தித்துறை)

வடமராட்சி தெற்கு மேற்குப் பிரதேச செயலர் பிரிவில் நியாப் திட்டத்தின் கீழ் 15 இலட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட மூன்று பொது நோக்கு மண்டபங்களை நாளை செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாண அரசாங்க அதிபர் எஸ்.பத்மநாதன் திறந்துவைக்கவுள்ளார்.

இத் திறப்பு விழாக்கள் வடமராட்சி தெற்கு மேற்குப் பிரதேச செயலர் எஸ்.சத்தியசீலன் தலைமையில் நடைபெறவுள்ளன.

இமையாணன், உடுப்பிட்டி தெற்கு, துன்னாலை தெற்கு ஆகிய மூன்று கிராமங்களிலும் தலா 5 இலட்சம் ரூபா செலவில் இப் பொதுநோக்கு மண்டபங்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

உடுப்பிட்டியில் ஆழமாக்கிப் புனரமைக்கப்பட்ட குளமும் அன் றைய தினம் விவசாயிகளின் பாவனைக்கு விடப்படும் எனத் தெரி விக்கப்பட்டுள்ளது. (க-52)

## வட-கிழக்கு மாகாண

# கால்நடை சுகாதாரத் திணைக்கள அதிகாரிகள் கடும் அசமந்தப்போக்கு

### அமைச்சர் அனுரகுமார திஸநாயக்க குற்றச்சாட்டு

வடக்கு-கிழக்கு மாகாண கால்நடை சுகாதாரத் திணைக்களத்துக்கென 4 கோடி ரூபா பெறுமதியான உபகரணங்களை ஒதுக்கியிருநத போதும் 5 இலட்சம் ரூபா பெறுமதியான பொருட்களையே அத்திணைக்களம் எம்மிடமிருந்து பெற்றுக கொண்டுள்ளது என்கிறார் காணி, விவசாய, கால்நடை, நீர்ப்பாசன அமைச்சர் அனுரகுமார திஸநாயக்க

கடந்த வியாழக்கிழமை மட்டக்களப்புக்கு விஜயம் செய்து மேற்படி அமைச்சின் நிர்வாகத்தின் கீழ் இயங்கும் திணைக்களங்களுககு உட்பட்ட பிரதேசங்களில் ஏற்பட்டவெள்ள அழிவு பற்றி ஆராய்ந்த பின்னர் இடம்பெறற செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில், நாம் வடக்கு-கிழக்கு மாகாணத்தைப் புறக்கணிக்கவில்லை. முன்னைய அரசாங்கத்தின் காலத்திலேயே வடக்கு-கிழக்கு மாகாணம் புறக்கணிக்கப்பட்டது.

நாம் ஒதுக்கிய 4 கோடி ரூபாவை பெற முன்வராதது வடக்கு-கிழக்கு மாகாண கால்நடை சுகாதாரத் திணைக்கள அதிகாரிகளின் பொறுப்பற்ற செயலேயாகும்.

அபபடியிருந்தும், சம்பந்தப்பட்ட திணைக்கள அதிகாரியை நாம் கொழும்புக்கு வருமாறு அண்மையில் அழைப்பு விடுத்திருந்தோம். ஆனால் அந்த அதிகாரி இதுவரையும் எம்மைச் சந்திக்கவில்லை.

இதற்கிடையில், எமது அமைச்சுக்கு உட்பட்ட திணைக்களங்களில் நிலவும் கால்நடை சுகாதார வைத்தியர், பெரும்பாக உத்தியோகததர், விவசாய போதனாசிரியர் வெற்றிடங்கள் யாவும் எதிர்வரும் மார்ச் மாதம் முதலாம் திகதிக்கு முன்னர் நிரப்பப்படும். முன்னர் அரசாங்கத்தினால ஒரு கிராமசேவை உத்தியோகத்தர் பிரிவுககு ஒரு விவசாய உதவியாளர் நியமிக்கப்பட்ட போதிலும் வடககு-கிழக்கு மாகாணத்தில் அந்த நியமனம் வழங்கப்படவில்லை.

எனவே, வடக்கு-கிழக்கில் இந்த நியமனததையும் விரைவில் வழங்கவுள்ளோம். இவைதவிர எதிர்காலததில் மாகாண சபைக்கு நிதி ஒதுக்கீடு செய்யாமல் அரசாங்க அதிபருக்கு நேரடியாக பணத்தை ஒதுக்குமாறு விடுத்த வேண்டுகோளையும் நான் ஏற்றுக்கொள்கின்றேன் என்றும அமைச்சர் மேலும தெரிவித்தார். (க)

## அரச முகாமை உதவியாளர் சேவை என மாற்றம் பெறும் அரச இணைந்த சேவைகள்

தற்போது அரச சேவைகளில் இணைந்த சேவையைச சேர்ந்த பொது எழுதுநர் சேவை, அரச தட்டெழுந்தாளர் சேவை, அரச சுருக்கெழுத்தாளர் சேவை, அரச கணககுப பதியுநர் சேவை, அரச சிறாப்பாசேவை மற்றும் களஞ்சியக் காப்பாளர் சேவை என்பன எதிர்வரும் 1ஆம் திகதி தொடக்கம் அரச முகாமை உதவியாளர் சேவை என மாற்றம் செய்யப்பட்டு நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அரச முகாமை உதவியாளர் சேவை,

அதிசிறப்புத் தரம்

வகுப்பு- I

வகுப்பு-II

வகுப்பு-III என நான்கு தரங்களைக் கொண்டதாக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இதில் வகுப்பு III இல் நியமனம் பெறும் உத்தியோகத்தர் ஒருவர் பதவியுயர்வுப் பரீட்சையின் மூலமும், சேவை மூப்பு அடிப்படையிலும் வகுப்பு IIக்கும் பதவியுயர்த்தப்படுவார். இவவாறே ஏனைய தரங்களிற்கும் பதவி உயர்வு நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

அரச முகாமை உதவியாளா சேவைக்கான பிரமாணக் குறிப்புத் தயாரிக்கப்பட்டு பரிசீலிக்கப்பட்டு வருவதாகவும் விரைவில் இதற்கான அறிவித்தல் அரச வர்த்தக மானியில் பிரசுரிக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

அரச முகாமை உதவியாளர் சேவைக்கு உள்ளீக்கப்படவுள்ளவர்கள் பிரமாணக்குறிப்பில் இணைக்கப்பட்டுள்ள இணைப்பு XIII இல் குறிப்பிடப்பட்டுள்ள படிவத்தில் திணைக்களத் தலைவரூடாக அரசாங்க நிர்வாக முகாமைத்துவ அமைச்சின் செயலாளர் அல்லது இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கு விண்ணப்பித்தல் வேண்டும.

அரச முகாமை உதவியாளர் சேவையில் உள்ளீர்ப்புச் செய்ய விருமபாத உத்தியோகத்தர்கள் ஓய்வு பெற்றுச் செலவதற்கான ஏற்பாடும் செய்யப்பட்டுள்ளது. (து-47)

## முதல் தொகுதி யாத்திரிகர்கள் மக்காவுக்கு பயணம்

புனித ஹஜ் கடமைக்காக இலங்கையிலிருந்து முதல் தொகுதி யாத்திரிகர்கள் 520 பேர் நேற்று முன்தினம் இரண்டு விமானங்களில் மக்காவிற்கு பயணமானர்கள்.

இம்முறை இலங்கையிலிருந்து 6ஆயிரத்து 500 பேர் புனித ஹஜ் கடமையை நிறைவேற்றவிருக்கின்றார்கள்.

எதிர்வரும் 16ம் திகதி வரை இவர்களின் இந்தப் பயணத்திற்கான ஏற்பாடுகள் முஸ்லிம் விவகார திணைக்களத்தினால் செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பான வைபவம் நேற்று முன்தினம் சிறிலங்கா கட்டுநாயக்கா விமான நிலையத்தில் நடைபெற்ற போது மேல்மாகாண ஆளுநர் அலவி மௌலானா முதல் தொகுதியினரை வழியனுப்பி வைத்தார். (க)

## பயிற்சி நெறி

(யாழ்ப்பாணம்)

"பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளரின் பணிப்பிற்கமைய புதிதாக அரச சேவையில் இணைக்கப்பட்ட எழுதுநரும், அதனோடு இணைந்த சேவை அலுவலர்களுக்குமாக யாழ்.மாவட்டத்தில் ஒழுங்கு செய்யப்பட்ட பயிற்சி நெறி இன்று தொடக்கம் 31ஆம் திகதி வரை காலை 9.00 மணி தொடக்கம் மாலை 430மணிவரை செயலகத்தின் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் பல்வேறு திணைக்களங்களிலும் புதிதாக இணைக்கப்பட்டுள்ள அலுவலர்களை மேற்படி பயிற்சி நெறியில் தவறாது கலந்துகொள்ள நடவடிக்கை எடுக்குமாறு யாழ். மாவடட அரசாங்க அதிபர் செ.பத்மநாதன் சம்பந்தப்பட்ட திணைக்களங்களுக்கு அறிவித்துள்ளார்.

(ற-5)

### 50 இலட்சம் பெறுமதியான

# நகைகளை கடத்த முயன்ற தாய்லாந்து யுவதி கைது

சுவிஸ் நாட்டில் பாரிய நிதி மோசடியில் ஈடுபட்டுள்ள அந்நாட்டு வர்த்தகரொருவரை கைது செய்வதற்கு இன்டர்போல் இலங்கை பொலிசாரின் உதவியை நாடியுள்ளது.

சூரிச் நகரில் பல்வேறு தொழில நிறுவனங்களின் நிர்வாகியாக இருந்த இவர் வங்கிகளிலும் பல்வேறு நிறுவனங்களிலும் கோடிக் கணக்கில் நிதிமோசடி செய்துள்ளார்.

தொழில் ரீதியாக ஏற்பட்ட வீழ்ச்சி காரணமாகவே இந்நிலை இவருக்கு ஏற்பட்டுள்ளது. அந்நாட்டிலருந்து 6 மாதங்களுக்கு முன்பு தலைமறைவாகிய ஏ.நிறிஸ்டியன் என்ற இந் நபர் நீர்கொழும்புப் பகுதியில் வசித்து வந்ததாகவும் கூறப்படுகின்றது.

இதேவேளை, தாய்லாந்திலிருந்து நேற்று முன்தினம் கட்டுநாயக்கா விமான நிலையத்தை வந்தடைந்த அந்நாட்டு யுவதியொருவர் சுங்கப் பகுதியினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

வைரம் பதிக்கப்பட்ட சுமார் 50 லட்சம் பெறுமதியான நகைகளை நாட்டுக்குள் தந்திரமான முறையில இவர் கடத்த முறபட்டுள்ளார்.

இந்த நகைகள் யாருக்காகக் கொண்டுவரப்பட்டது என கண்டறிவதற்காக விசாரணைகள் தொடர்கின்றது. (க)

## ஓய்வூதியம் பெறுபவர்களின் கொடுப்பனவை அதிகரிக்கும் சுற்றுநிருபம் வெளியிடப்பட்டுள்ளது

(கொழும்பு)

ஓய்வூதியம் பெறுபவர்களின் கொடுப்பனவுகளை அதிகரிப்பதற்கான சுற்றுநிருபம் வெளியிடப்பட்டுள்ளது.

ஓய்வூதியத் திணைக்களப் பணிபபாளர் கே.ஏ.திலகரத்ன இது தொடர்பாக தகவல் தெரிவிக்கையில்,

புதிய சுற்றுநிருபத்திற்கமைய டிசம்பர் மாத நிலுவைத் தொகையுடன் ஜனவரி மாதத்தின் ஓய்வூதியத்தை அவர்கள் பெற்றுக் கொள்வார்கள் என்று தெரிவித்தார்.

அரசாங்கத்தின் வரவு செலவுததிட்டத்தில் ஓய்வூதியக் கொடுப்பனவு 15 சதவீதத்தினால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய ஓய்வூதியக்கொடுப்பனவுகளும் 750 ரூபாவில் இருந்து 1500 ரூபாவரை அதிகரிககப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (க-7)

# சமாதானத்தின் ஊடாக மக்களின் வாழ்வு சிறக்க வேண்டுமென்பதே எமது விருப்பம்

### வவு.மாவட்ட மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் தெரிவிப்பு

சமாதானத்தின் மீது நாங்கள் உறுதியாகவுள்ளோம். போர் எம் மீது திணிக்கப்படுமானால் எமது மக்களைப் பாதுகாக்கும் நோக்குடன் போராடவேண்டிய பொறுப்பு எமக்குள்ளது.

அரசு போருக்கான அனைத்து ஆயத்தங்களையும் மேற்கொண்டு வருகின்றது. அதற்கான முனைப்பிலேயே தீவிரமாக ஈடுபட்டுள்ளது. ஆனால் நாங்கள் சமாதானத்தின் மீது இப்போதும் நம்பிக்கை வைத்திருக்கின்றோம் என வவுனியா மாவடட மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் எஸ்.சுபாஸ் வவுனியா முத்தையா மண்டபத்தில் நடைபெற்ற வெண்சங்கு நூல் வெளியீட்டு விழாவில் உரையாற்றும் போது தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

சமாதானத்தின் ஊடாகவே எமது மக்களுடைய வாழ்வு சிறக்க வேண்டும் என நாங்கள் விரும்புகின்றோம். போர் நடைபெற்ற காலத்தில் எமது சந்ததியினுடைய கல்வி விடயத்தில் எமது தேசியத் தலைவர் மிகுந்த அக்கறை கொண்டிருந்தார்.

வருங்கால சமுதாயத்தினைச் சிறந்த புத்திஜீவிகளாக்க அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டன. எந்தச் சந்தப்பத்திலும் கலவி நடவடிக்கைகளுக்கு நாங்கள் இடையூறாக இருந்ததில்லை. சில சந்தர்பபங்களில் எங்களுடைய போராளிகள் மாணவர்களுக்குத தேவையான பாடசாலை உபகரணங்களைப பெற்றுக்கொண்டு திரும்பும் போது வீரச்சாவை அடைந்துள்ளார்கள்.

போர்க் காலத்தில் கல்வி அபிவிருத்திக்காக நாங்கள் பல தியாகங்களையும் அர்ப்பணிப்புக்களையும் செய்துள்ளோம். போர்க் காலத்தில்தான் கொடுமைகள் என்றால் சமாதான காலத்திலும் எமது மக்கள் பல கொடுமைகளைச் சந்திக்கின்றார்கள். எங்களுடைய பூர்வீக பிரதேசங்கள் இப்போது நாளுக்கு நாள் பறிபோய்க் கொண்டிருக்கின்றது. இவ்வாறான விடயங்கள் வெளிக்கொணரப்பட வேண்டும் எனத் தெரிவித்தார்.

(ற-8)

## ஜனவரியில் மா தட்டுப்பாடு நீங்கும்

### வர்த்தக அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

நாடடில் தற்போது ஏற்பட்டுள்ள மா தட்டுப்பாடானது பிறிமா நிறுவனத்தின் திட்டமிட்ட சதி நடவடிக்கையே என நுகர்வோர் பாதுகாப்புத்துறை அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே தெரிவித்துள்ளார்.

தற்போது ஏற்பட்டுள்ள கோதுமை மா தட்டுப்பாட்டினை நீக்குவதற்குரிய சகல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அடுத்த ஆண்டு ஜனவரி மாதத்திற்கு முன்பாக வெளிநாடுகளிலிருந்து கோதுமை மாவை இறக்குமதி செய்ய நடவடிக்கைகள் எடுத்துள்ளோம்.

பெரும்பாலும் ஜனவரி மாதமளவில் மா தட்டுப்பாடு நீங்கிவிடும் என எதிர்பார்க்கின்றோம்.

தற்போது பிறிமா நிறுவனம் விற்பனை செய்யும் மாவிற்கு அரசாங்கம் மானியத்தை வழங்குகின்றது.

இதன் மூலம் கிலோ ஒன்றுக்கு 7ரூபா பிறிமா நிறுவனத்திற்குக் கிடைக்கின்றது.

ஆனால் அடுத்த ஆண்டு முதல் இறக்குமதி செய்யப்படவுள்ள மாவிற்கு அரசாங்க மானியம் வழங்கப்படமாட்டாது.

இருந்தாலும் பிறிமா நிறுவனம் வற்பனை செய்யும் அதேவிலைக்கு மாவினை விற்பனை செய்ய அரசாங்கம் நடவடிக்கையெடுத்துள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, கடந்த கால ஆட்சியில் ஐக்கிய தேசியக்கட்சி பிறிமா நிறுவனத்துடன் செய்து கொண்ட ஒப்பந்தம் காரணமாகவே தற்போதைய அரசாங்கம் பெரும் நெருக்கடிகளை சந்தித்துள்ளது என அரச தரப்பினர் குற்றஞ்சாட்டி வருகின்றனர். (க-9)

## சட்டவிரோத மண் அகழ்வில் ஈடுபட்ட லொறி சிக்கியது

(துன்னாலை)

சட்டவிரோதமாக கடற்கரை மணலை ஏற்றிச்சென்ற லொறி பொலிஸாரிடம் சிக்கிக்கொண்டது.

இது தொடர்பாக பருத்தித்துறை நீதிமன்றில் கடந்த 21ஆம் திகதி தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் அனுமதிப்பத்திரம் இன்றி கடற்கரை மண்ணை லொறியில் ஏற்றிச்சென்ற குற்றத்திற்காக ஆவரங்காலைச்சோநத இருவருக்கும் 10 ஆயிரம் ரூபா தண்டம் விதித்ததுடன,

அப்பணத்தைச செலுத்தத் தவறின் 6 மாத சிறைத்தண்டனை வழங்கப்படும் எனவும் பருத்தித்துறை நீதிவான் க.அரியநாயகம் தீர்பளித்ததுடன் குறித்த மணலை வதிரி அண்ணமார் ஆலயததிற்கு வழங்குமாறும் கட்டளையிட்டார்.

(க-101)

# இந்தியா இறங்கி வந்தால் நாமும் விட்டுக் கொடுப்போம்

## காஷ்மீர் விவகாரம் குறித்து முஷாரப் கருத்து



(புதுடில்லி)

காஷ்மீர் பிரச்சினையில் இந்தியா இறங்கிவந்தால் எங்களது நிலையிலிருந்து நாங்களும் இறங்கிவரத் தயாராக இருக்கிறோம் என்று பாகிஸ்தான் அதிபர் பர்வேஸ் முஷாரப் கூறியுள்ளார்.

இஸ்லாமாபாத்தில் முஷாரப் அளித்த பேட்டியில்,

காஷ்மீர் பிரச்சினைக்கு ஐ.நா. தீர்மானத்தின்படி, தீர்வுகாண பாகிஸ்தான் தயாராக உள்ளது.

எனினும் இதில் இந்தியா இறங்கி வந்தால் எங்களது நிலைப்பாட்டிலிருந்து நாங்களும் இறங்கிவருவோம்.

1948இல் நிறைவேற்றப்பட்ட ஐ.நா.தீர்மானத்திலிருந்து பாகிஸ்தான் ஓர் அங்குலம்கூட விலகிச் செல்லவில்லை. காஷ்மீர் பிரச்சினைக்கு அங்கு வசிக்கும் மக்களின் மதிப்புக்கும், மரியாதைக்கும் குந்தகம் ஏற்படாத வகையில் அவர்கள் விருப்பப்படி தீர்வு காணப்பட வேண்டும் என்பதுதான் பாகிஸ்தானின் நிலை.

பாகிஸ்தானில் நிலவும் அரசியல் குழப்பநிலைக்குத் தீர்வு காண்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருகிறேன்.

பாகிஸ்தானில் மாநில சட்டப் பேரவைகளும் நாடாளுமன்றமும் செயல்பட்டு வருவதை வைத்தே இங்கு ஜனநாயகம் தழைத்தோங்குகிறது என்பதை அறியலாம்.

எனது ஆட்சியில்தான் உண்மையான ஜனநாயகம் தழைத்தோங்குகிறது என்றார். (ப)

## 10 தலிபான்கள் கைது

(காந்தஹார்)


ஆப்கானிஸ்தானின் காந்தஹார் பகுதியில் தலிபான் போராளிகள் 10 பேரை ஆப்கான் படைகள் கைது செய்தது.

முன்னதாக, பொலிஸாருடன் நடந்த மோதலின்போது 2பேர் கொல்லப்பட்டனர். இவர்களில் ஒருவர் தலிபான் போராளி. (ப)

WORLD NEWS உலக தரிசனம்



சென்னை மெரினாவில் உள்ள எம்.ஜி.ஆர் நினைவிடத்தில் அஞ்சலி செலுத்திவிட்டு ஜெயலலிதாவும் மந்திரிகளும் உறுதிமொழி அறிக்கை படித்தபோது எடுத்த படம்.



கிறிஸ்துமஸ் திருநாளன்று வத்திகனில் செயின்ட் பீட்டர் தேவாலயத்தில் நடந்த சிறப்புப் பிரார்த்தனை நிகழ்ச்சியில் ஒரு பகுதியையே படத்தில் காண்கிறீர்கள்.

# தொடரும் வன்முறைகளால் தாய்லாந்தில் 500பேர் சாவு

(கோலாக்)

தாய்லாந்தில் முஸ்லிம்கள் அதிகம் வசிக்கும் பகுதியில் மோட்டார் சைக்கிள் வெடிகுண்டு வெடித்ததில் ஒருவர் பலியானார்.

தாய்லாந்தில் சமீபகாலமாக முஸ்லிம்கள் வன்முறையில் ஈடுபடுவது அதிகரித்துள்ளது. முஸ்லிம்கள் அதிகம் உள்ள சுங்காய் கோலாக் பகுதியில் கடந்த அக்டோபரில் நடந்த குண்டுவெடிப்பில் மலேசிய சுற்றுலாப் பயணிகள் இரண்டுபேர் பலியாயினர். இருபது பேர் படுகாயம் அடைந்தனர். கடந்த மார்ச்சில் கரோகி பகுதியில் நடந்த குண்டுவெடிப்பில் 28பேர் காயமடைந்தனர். பட்டாணி, நராதிவட், யாலா ஆகிய மாகாணங்களில் நடந்த வன்முறைச் சம்பவங்களில் இந்த ஆண்டுமட்டும் 500 பேர் வரை பலியாகியுள்ளனர்.

இந்நிலையில், நேற்று முன்தினம் சன்காய் கோலாக் பகுதியில் மீண்டும் மோட்டார் வெடிகுண்டு வெடித்ததில் ஒருவர் பலியானார். பெண்கள் இருவர் உட்பட ஆறு பேர் படுகாயம் அடைந்தனர். இச்சம்பவத்துக்குக் காரணமானவர்களைப் பொலிஸார் தீவிரமாகத் தேடி வருகின்றனர். (ப)

# சதாமிற்கு எதிராக சாட்சி அளிக்க முன்னாள் துணை பிரதமர் மறுப்பு

(பக்தாத்)

சதாம் ஹுசேனுக்கு எதிராக சாட்சியம் அளிக்கமாட்டேன் என்று ஈராக் முன்னாள் துணைப் பிரதமர் தரிக் அஜிஸ் மறுப்புத் தெரிவித்தார்.

அமெரிக்க கூட்டுப்படையின் பிடியில் சிக்கியுள்ள ஈராக் முன்னாள் அதிபர் சதாம் ஹுசேன் உட்பட 12 முக்கிய தலைவர்கள் மீது ஈராக்கில் நீதிமன்ற விசாரணை தொடங்கி உள்ளது. சதாமின் நெருங்கிய உறவினரும் முன்னாள் பாதுகாப்பு அமைச்சருமான கெமிக்கல் அலியிடம் கடந்தவாரம் விசாரணை நடந்தது.

வழக்கு விசாரணையை எதிர்கொள்வது தொடர்பாக சதாம் ஹுசேன் தனது வக்கீலை அழைத்து ஆலோசனை நடத்தினார்.

இந்நிலையில், ஈராக்கின் முன்னாள் துணைப் பிரதமர் தாரிக் அஜிஸ் (68 வயது) கிறிஸ்தவரான இவர் ஆங்கில இலக்கியம் பயின்றவர். சதாமின் சாம்ராஜ்யம் சரிவதற்கு முன் பல்வேறு உலக நாடுகளுக்குப் பறந்து அதைத் தவிர்க்க முயன்ற முக்கிய தலைவர். இதற்காக வாடிகன் நகரில் போப் இரண்டாம் ஜோன் பவுலையும் அப்போது அவர் சந்தித்தார். பின்னர் 2003 ஏப்ரலில் அமெரிக்கப் படைகளிடம் சரணடைந்து சிறையில் அடைக்கப்பட்டார்.

ஈராக் நீதிமன்ற விசாரணை தொடர்பாக தாரிக் அஜிசை, அவரது வக்கீல் ஹாதி ஆரிப் ஐந்து மணிநேரம் சந்தித்துப் பேசினார். முதல் முறையாக நடந்த இநதச் சந்திப்பில் அவர் மீதான வழங்குகள் குறித்து ஆலோசனை நடந்தது. சதாம் ஹுசேனுக்கு எதிராகச் சாட்சியம் அளிக்கமாட்டேன் என்று தாரிக் அஜிஸ் திட்டவட்டமாக மறுத்துவிட்டார் என்று வக்கீல் தெரிவித்தார். (ப)

# முஷாரப்பை கொல்ல முயன்ற இராணுவ வீரருக்கு மரண தண்டனை

(புதுடில்லி)

கடந்த ஆண்டு டிசெம்பரில் பாகிஸ்தான் அதிபர் முஷாரப்பைக் கொல்ல முயன்ற இராணுவ வீரருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

இதே வழக்கில் மற்றொரு இராணுவ வரருக்கு 10 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. இத்தகவலைப் பாகிஸ்தான் தொலைக்காட்சி வெளியிட்டது.

முஷாரப்பைக் கொல்லும் முயற்சியில் இராணுவ 8 வீரர்கள் மீது வழக்குத் தொடரப்பட்டது. 6 வீரர்களின் மதான வழக்கு தனியாக நடத்தப்படும் என்று அரசு அறிவித்துள்ளது.

இராணுவ நீதிமன்றத்தில் தீர்ப்பு வழங்கப்பட்டது என்று மட்டும் அரசின் செய்தித்தொடர்பாளர் கூறினார். எப்போது, எங்கே தீர்ப்பு வழங்கப்பட்டது என்று கூறவில்லை.

கடந்த ஆண்டு டிசெம்பர் 14இல் முஷாரப்பின் வாகனம் பாலமொன்றைக் கடந்தபிறகு குண்டுவெடித்தது. இதில் பாலம் தகர்க்கப்பட்டது. அதே மாதம் 25ஆம் திகதி வெடிகுண்டுகள் நிரம்பிய வாகனத்தை முஷாரப்பின் வாகனத்தின் மீது மோத இருவர் முயன்றனர். இத்தாக்குதலில் பொலிஸார் உட்பட 17 பேர் இறந்தனர். (ப)

# இராணுவ ஒத்துழைப்பு ஒப்பந்தம் குறித்து இஸ்ரேல் - இந்தியா பேச்சுவார்த்தை !

(புதுடில்லி)

இரு தரப்புக்கும் பரஸ்பரம் பலன் தரக்கூடிய விதத்தில், பாதுகாப்புத் துறையிலான ஒத்துழைப்பை இந்தியாவும் இஸ்ரேலும் மறு ஆய்வு செய்துவருகின்றன. இத்துறை தொடர்பான புதிய அம்சங்களில் ஒத்துழைப்புக் காண்பதில் இரு நாடுகளும் முனைப்பாக உள்ளன.

பாதுகாப்புத்துறை ஒத்துழைப்பு குறித்து கூட்டுப்பணிக் குழுவின் கூட்டம் ஆலோசனை நடத்தியது. இந்தக் கூட்டத்தில் பாதுகாப்புத்துறை செயலர் அஜய் விக்ரம் சிங் தலைமையிலான 8 உறுப்பினர்கள் குழு இந்தியா சார்பில் பங்கேற்றது.

இஸ்ரேலுக்கு மிக நெருக்கமான நாடுகளில் ஒன்று இந்தியா. காங்கிரஸ் கூட்டணி தலைமையில் புதிய அரசு அமைந்துள்ளதால் பாதுகாப்புத்துறை ஒத்துழைப்பில் பாதிப்பு ஏதும் ஏற்படாது. ஒத்துழைப்புக்கான அடித்தளம் வலிமையாக உள்ளது என்று பாதுகாப்புத் துறை வட்டாரங்கள் தெரிவித்தன.

பாதுகாப்பு, பயுங்கரவாத ஒழிப்பு உளளிட்ட பல்வேறு துறைகளில் இணைந்து செயல்படுவதை இரு நாடுகளும் தீவிரப்படுத்தி உள்ளன.

இந்தியாவின் பாதுகாப்புத்துறையைச சார்ந்த குழு ஒன்று கடந்தவாரம் இஸ்ரேல் சென்றது. சில ஒப்பந்தங்களில் இரு நாடுகளும் கையெழுத்திட்டன. இராணுவத்துக்குத் தேவையான நவீன சாதனங்களை இந்தியாவுக்கு அதிகளவு வழங்குவதில் ரஷ்யாவுக்கு அடுத்த நிலையில் உள்ளது இஸ்ரேல்.

ரஷ்யாவுக்கு அடுத்தபடியாக இந்தியாவுக்கு இராணுவ தளபாடங்களை வழங்கும் நாடு இஸ்ரேல் என்பது குறிப்பிடக்கக்கது. (ப)



ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலில் அதிபர் கமித் கர்ஷாய் தலைமையிலான அரசின் புதிய அமைச்சரவை நேற்று முன்தினம் பொறுப்பேற்றுக்கொண்டது.



# மகளிர் உலகம்


# கொடிகட்டிப் பறக்கும் கணவன் ஆதிக்கம்?

ஒரு குடும்பத்தில் கணவன் ஆதிக்கம் செலுத்துகிறாரா அல்லது மனைவியின் அதிகாரம் கொடிகட்டிப் பறக்கிறதா என்று கேட்டால், எல்லோரும் கண்களை மூடிக்கொண்டு கணவன்தான் என்பார்கள்.

பெரும்பாலான குடும்பங்களில் கணவன்தான் சம்பாதிக்கும் நபர். எனவே எந்த முடிவும் அவர்தான் எடுப்பார். மனைவி என்பவள் அவர் சொற்படி கேட்கும் ஒரு வேலைக்காரி என்று இதற்குக் காரணம் சொல்கிறார்கள்.

இது உண்மைதானா என்று கண்டறிய சமீபத்தில் இந்தியாவில் ஒரு ஆராய்ச்சி நடந்தது. இதில் வெளியான முடிவுகள் பலருக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தும்.

உண்மையில் பெரும்பாலான வீடுகளில் கணவன்தான் மனைவியை நம்பியிருப்பதாக இந்த ஆராய்ச்சி முடிவு தெரிவிக்கிறது.



தேநீர் குடிப்பதிலிருந்து அலுவலகம் செல்ல ஸ்கூட்டரில் ஏற்றிவிடுவதுவரை அவர் சகல விஷயத்திலும் மனைவியை சார்ந்தே இருக்கிறார். அலுவலகம் முடிந்து வந்தபிறகும் இதேநிலைதான்.

பிரசவத்துக்கோ அல்லது குழந்தைகளின் விடுமுறைக்கோ மனைவி தன் பிறந்தவீடு சென்றுவிட்டால், தனியாளாக வ்ட்டில் கணவன் படும்பாடு மிகவும் பரிதாபம்தான். பெண்டாட்டி இல்லாத வாழ்க்கையும் ஒரு வாழ்க்கையா? என்று தனக்குள்ளே புலம்பித் திரிவார் (ஆனால் இதை வெளியில் சொல்லமாட்டார்) என்பது வேறு விஷயம்.

அதேநேரம் மனைவி சில நாட்கள் தங்களோடு இல்லையென்றால் சுதந்திரப்பறவையாகிவிட்ட சந்தோஷத்தில் ஹோட்டல், மதுக்கடை என்று தஞ்சமாகிவிடும் ஆண்களும் இல்லாமலில்லை.

மனைவி தன்னுடன் இருக்கும்வரை அலுவலகத்தில் நேரம் தவறாதவர் என்ற பெயரோடு விளங்கும் பெரும்பாலான கணவர்கள், அதே மனைவி இல்லாத நாட்களில் தாமதமாகப் போய் உயர் அதிகாரிகளின் கோபத்துக்கு ஆளாவது அதிகரித்திருப்பதாக இந்த ஆய்வு கூறுகிறது.

பொதுவாக ஆண்கள் என்றாலே பிறரை அலட்சியப்படுத்துபவர்கள். துக்கம் என்பதையே அறியாதவர்கள். கல்நெஞ்சுக்காரார்கள் என்ற இமேஜ் உள்ளது. இது சிலரால் உருவாக்கப்பட்ட தோற்றம்தான். வெளிப்பார்வைக்குப் பல ஆண்டுகள் இப்படித் தெரிந்தாலும் உள்ளுக்குள் இதற்கு நேர்மாறான இயல்புடையவர்களாக இருக்கிறார்கள்.

மனைவி இருக்கும்போது அவளது பேச்சைக் கேட்டு, 'சும்மா தொணதொணக்காதே' என்று எரிந்துவிழும் கணவர்கள், அவள் இல்லாதபோதுதான் அந்த வெறுமையை உணர்ந்து கஷ்டப்படுகின்றார்கள்.

உளவியல் நிபுணர்களின் கருத்துப்படி மனைவி பொருளாதார காரணங்களுக்காகக் கணவனை நம்புகிறாள். ஆனால் கணவனோ வருமானத்தோடு தனது வாழ்க்கையையும் மனைவியிடமே ஒப்படைத்துவிடுகின்றான்.

உண்மையில் பெண்ணை தவிர்த்துவிட்டு, எந்த நிலையிலுமே ஆண்களால் வாழமுடிவதில்லை என்கிறார்கள் உளவியல் வல்லுனர்கள்.

பிறக்கும்போது தாயையும், இளமைப் பருவம் இனிமையாகத் திகழக் காதலியையும், வாழ்க்கை முழுவதும் துணைக்கு வர அதே காதலி மனைவியாகவும் அவனுக்குத் தேவைப்படுகிறாள்.

குழந்தையிலிருந்து இளமைப்பருவம் வரை ஒரு ஆண், கல்வியைத் தவிர வேறு எதிலும் பெரும்பாலும் கவனம் செலுத்துவதில்லை. ஆனால அதேபெணகுழந்தை ஐந்து வயதிலிருந்தே அன்றாட அத்தியாவசிய வேலைகள் பலவற்றைக் கற்றுக்கொள்கிறாள்.

சமையல், இதர வீட்டு வேலைகள், கிராமங்களில் விவசாய வேலைகள் என அனைத்திலுமே அவள் தேர்ந்தவளாகிவிடுகிறாள். ஆதனால்தான் திருமணத்திற்குப் பிறகு கணவனின் அனைத்துப் பணிகளையும், அவனைப் பராமரிப்பதிலும் மனைவியால் தாமதமின்றி செய்யமுடிகின்றது.

இன்னொரு விஷயத்தையும் கவனிக்கவேண்டும். கல்யாணம் ஆகும் வரை ஆண்கள் பக்குவப்படுவதே இல்லை. யாருக்கும் அடங்காத காளைகளாகத் திகழ்கின்றனர். திருமணத்திற்குப் பிறகு அவர்களின் நடை உடை பழக்கவழக்கங்களே மாறிப்போகிறது.

அதனால்தான் நமது முன்னோர்கள் திருமணத்தை ஆண்களுக்குப் போடும் கால்கட்டு என்று வர்ணிக்கிறார்கள். பல பெரிய தலைவர்களின் வீடுகளில் போய்ப்பார்த்தால் தெரியும் அங்கு மனைவிதான் சகலதையும் முடிவு செய்கிறாள். தனது முடிவை ஒரு அறிவிப்பாக மட்டுமே கணவரிடம் தெரிவிக்கிறாள். இதுதான் அந்தத் தலைவர்களின் வெற்றியின் ரகசியம். அவர்களைக் கேட்டால் என் மகன் அல்லது மகள் எந்த வகுப்பில் படிக்கிறாள் என்று கூடத் தெரியாது. எல்லாம் என் மனைவிதான் என்பார்கள். குடும்பப் பொறுப்பை பெண்கள் சுமப்பது பெண்ணடிமைத்தனம் என்று சிலர் சொல்லக்கூடும்.

அது தவறு. பெண்களுக்குப் பெருமைதரும் விஷயம் குடும்பப் பொறுப்பை சரியாக நிறைவேற்றுவதுதான் ஒரு பெண் ஆயிரம் பணிகள் இருந்தாலும் முதலிடம் தரவேண்டியது குடும்பப் பொறுப்புக்குத்தான். இதற்குப் பிறகுதான் மற்றெல்லாமே.

# எச்சரிக்கை

உடல் இளைக்க ஆபூர்வ மருந்து என்று இன்று எத்தனையோ வகையான மருந்து மாத்திரைகள் சந்தையில் விற்பனைக்கு வந்துள்ளன. காரணம் இவ்வகையான மருந்து, மாத்திரைகளுக்கு பெண்கள் மத்தியில் கிடைக்கும் அமோக வரவேற்புதான்.



எந்தப் பத்திரிகையைப் புரட்டினாலும், எந்தச் சனலைத் திருப்பினாலும் குண்டாக இருக்கும் பெண்களை ஒல்லியாக ஸ்லிம்மாக மாற்றுவதைப் பற்றித்தான் அதிக விளம்பரங்கள் வருகின்றன.

உண்மையிலேயே இந்த மருந்துகளை விழுங்குவதால் எடை குறைந்து குண்டாக இருந்தவர்கஎெல்லாரும் ஸ்லிம்மாக மாறிவிடுவார்களா?

ஆனால் இந்த மருந்துகளால் பல்வேறு பக்க விளைவுகளுக்கு ஆளாகி துன்புறுகிறவர்களின் தொகை நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது.

சிங்கப்பூரில் இவ்வாறு உடல் இளைப்பதற்காக மாத்திரை சாப்பிட்ட பெரும்பாலான பெண்கள் இதயம் மற்றும் வயிற்றுக் கோளாறுகளிலுள்ள 'பைன்ப்ளூரமின்' என்ற இரசாயனப் பொருள் இதய நாளங்கள் மற்றும் தைரோயிட் சுரப்பிகளைப் பாதிக்கின்றது.

எடை குறைப்பு மாத்திரைகளைச் சாப்பிடுவதற்கு முன் போதிய மருத்துவ பரிசோதனைகளையும் இம்மாத்திரைகளின் பக்கவிளைவுகள் பற்றியும் ஒரு வைத்திய நிபுணரிடம் கேட்டுக் தெரிந்துகொண்ட பின்னரே இவற்றைப் பாவிக்கவேண்டும்.

விளம்பரங்கள் கொடுக்கும் பொய்யான வாக்குமூலங்கள் - வாக்குறுதிகளை நம்பவேண்டாம்.

ஒரு குறுக்குவழி.

உங்கள் உணவில் மிகுந்த கவனம் செலுத்தினால் உடல் எடை தானாகவே சீராகிவிடும்.

# சமைத்துச் சுவைப்போம்

## கடலை மசாலா

**தேவையான பொருட்கள்**

| | | | |
|---|---|---|---|
| கடலை | 1/4Kg | மிளகாய் | 4 |
| பாசிப்பருப்பு | 2ஸ்பூ,ன் | எண்ணெய் | தேவையானளவு |
| வெங்காயம் | 1 | பூ,ண்டு | 4 |
| கறுவாப்பட்டை | சிறிதளவு | பெருஞ்சீரகம் | சிறிதளவு |

**செய்முறை:-**

கறுவாப்பட்டை, பெருஞ்சீரகம், இஞ்சி, மிளகாய் ஆகியவற்றை அரைத்துக்கொள்ளவும்.

கடலையை இரவே ஊறவைத்து மறுநாள் ஊறிய கடலையையும், பாசிப்பருப்பையும் வேக வைக்கவும். தாச்சியில் எண்ணெயை சுடவைத்து அரைத்த மசாலைவை நன்கு தாளிக்கவும். வேகவைத்த கடலையைத் தண்ணீரோடு மசாலாக்கலவையில் கொட்டிக் கிளறவும். நீர்வற்றியதும் ரொட்டி, தோசை, பூரி இவற்றுடன் பரிமாறலாம்.

# வீட்டுக்குள் விபத்துக்கள்!

வீட்டில் அடிக்கடி விபத்து நடக்கும் இடங்கள் பாத்ரூம், ரொயிலட் மற்றும் சமையலறை. தண்ணீர் பிளங்கும் இந்த இடங்களில் பாசி பிடிப்பதால் சறுக்கிவிழும் சந்தர்ப்பங்கள் அதிகம். இதனால் சாதாரண சுழுக்கு முதல் மிகவும் வேதனைதரும் எலும்பு முறிவு வரை ஏற்படக்கூடும்.

எலும்புமுறிவு மருத்துவமனைகளில் வரும் நோயாளிகள் பொரும்பாலும் வீட்டில் சறுக்கி விழுந்தவர்களாகவே இருக்கின்றனர். இதைத் தவிர்க்க வேண்டுமானால் வாரம் ஒரு முறை இரவில் குளியலறை, கழிவறைகளை பிளிச்சிங்பவுடர் போட்டு தேய்த்துவைத்துக் காலையில் கழுவிவிடவும். செருப்பு உபயோகிப்பவர் என்றால் அதில் 'கிறீப்' இருக்கும்வரை மட்டுமே பயன்படுத்தவும். பொதுவாகத் தரைகளை சவர்க்காரம் போட்டு கழுவும்போது கவனமாக இருக்கவேண்டும். கிரைண்டர், மிக்சி போன்ற சமையலறை உபகரணங்களை இயக்கும் போது, ஈரக் கைகளுடன் மின்சார பட்டன்களை அழுத்தவேண்டாம். கிறைண்டர், கீட்டர், பிறிச், ஏசி, போன்ற அதிக மின்னழுத்த சாதனங்களை வெகுகவனமாகக் கையாளவேண்டும். சரியானமுறையில் 'ஏர்த்' கொடுக்கப்படாவிட்டால் இச்சாதனங்களில் ஏற்படும் மின்கசிவு உயிருக்கே உலைவைக்கக்கூடும்.

கனமான ரப்பர் மேட் போட்டு அதன் மீது நின்றுகொண்டு இந்த உபகரணங்களை இயக்குவதே பாதுகாப்பானது.

கூடுமானவரை மல்டிபின் சொக்கட்டுகளைப் பாவிப்பதைத் தவிர்க்கவும். இதனால் அதிகளவு மின அழுத்தத்தால் உண்டாகும் தீவிபத்தைத் தடுக்கலாம்.


காஸ்சிலிண்டர் வெடித்து வீடு தரைமட்டம். இருவர் பலி. ஸ்டவ் பற்றவைக்கும்போது சேலையில் தீப்பிடித்து பெண் மரணம். பத்திரிகைகளில் வரும் இத்தகைய செய்திகளை எத்தனை பேர் சீரியஸாக எடுத்துக்கொள்கிறார்கள்.


சரி இந்த விபத்துக்களை எப்படித் தவிர்ப்பது?

ஒவ்வொருமுறையும் காஸ அடுப்பைப் பற்றவைக்க முன்னர் காஸ் வாடை வராததை உறுதி செய்துகொள்ளுங்கள். தீக்குச்சியைக் கொழுத்திய பின்னரே அடுப்பின் குமிழைத் திருப்பவும்.

அதுபோல எண்ணெய் அடுப்பு உபயோகப்படுத்துபவர்கள் ஒருபோதும் அடுப்பெரியும்போது மண்ணெண்ணெய் ஊற்றக்கூடாது. பர்ணலில் அடைப்பு இருந்தால் அடுப்பு சரியாக எரியாது. 'பின்' செய்து அடைப்பு நீக்குவதற்குப் பதில் பலரும் அளவுக்கதிகமாக காற்றடித்து விடுகிறார்கள். சில வீடுகளில் மரை தேய்ந்து போன டாங் மூடியில் பொலித்தின் கவர் அல்லது காகிதத்தை வைத்து திருகியிருப்பார்கள். அளவுக்கதிகமான காற்றழுத்தத்தால் டாங்கியின் மூடி எகிறும்போது சந்தேகமில்லை. 'டமால்'தான்.


# வடமராட்சியில் கடற்கொந்தளிப்பின் கோரங்களின் அவலம்
















படங்கள்: சிவசங்கர்



வன்னியில் ஏற்பட்ட அவலம்

# தென்கிழக்காசியாவில் கடற்கொந்தளிப்பின் கோரங்களின் அவலம்...



இந்தோனேசியாவில்...




தாய்லாந்தில்



புக்கட்டில்...



தாய்லாந்தில்...



தமிழ் நாட்டில்...



மலேசியாவில்...



தமிழ் நாட்டில்...



மலேசியாவில்...

வகுத்தான் வகுத்த வகையல்லால் கோடி
தொகுத்தார்க்கும் துய்த்தல் அரிது -குறள்

வலம்புரி

# இறைவா...! ஏன் இந்தச்சீற்றம்

இயற்கையின் சீற்றத்தால் தென்கிழக்கு ஆசியாவே சோகத்தில் மூழ்கியுள்ளது. அதிலும் இலங்கையின் வடக்கு கிழக்குப்பகுதியில் ஏற்பட்ட கடல்கொந்தளிப்பானது வரலாற்றில் நடவாத பெரும் துயரநிகழ்வாகி விட்டது.

மனித வாழ்க்கை இப்படித்தானா என்று தலையில் கைவைத்து புலம்பும் வகையில் குழந்தைகள், முதியவர்கள், பெண்கள், என ஆயிரக்கணக்கானோர் உயிரிழந்துள்ளமை பேரதிர்ச்சியைத் தந்துள்ளது.

யுத்தத்தின் வடுக்களால் நொந்துபோய் சமாதானம் என்ற ஆறுதலில் இருந்த மக்களை இயற்கையும் சீண்டிவிட்டமை ஏன்? எதற்காக? என்ற விடைகிடைக்காத கேள்விகளோடு கண்கள் குளமாகின்றன.

உலகம் முழுவதிலும் உள்ள கிறிஸ்தவர்கள் யேசு பிரானின் அவதார நாளை கொண்டாடிக் கொண்டிருக்கும் வேளையில், உலக இந்துக்கள் ஆருத்திரா தரிசனத்தை கண்டுகளிக்க இருந்த நேரத்தில் இப்படியோர் துயரம் ஏற்பட்டுவிட்டமை மனித உள்ளங்களை ரணகளமாக்கியுள்ளது.

2004ம் ஆண்டு யுத்தமற்ற ஒரு ஆண்டாக விடை பெறுவதற்கு இன்னமும் ஐந்து நாட்களே இருக்கையில் தாங்கமுடியாத வேதனையை தந்து விட்டு போகின்றது இந்த ஆண்டு.

ஏன்? எதற்காக? என்ற கேள்விகள் ஒருபுறம், மறுபுறம் பிள்ளைகளை காணாத பெற்றோரின் பிதற்றல்கள் கண்முன்னேயே, தாம் பெற்ற குழந்தைகளை ஓவென்றுஎழுந்த கடல் அலை அள்ளிச் சென்றதுயரத்தில் பிரமைபிடித்த பெற்றோர்.

பெற்றவர்களை பறிகொடுத்த பிள்ளைகள், உடைமையை இழந்தவர்கள், கடல் அலைக்குள் அகப்பட்டு மறுபிறப்பெடுத்து வைத்தியசாலை படுக்கையில் விம்மிக்கொண்டே இருப்போர், இப்படியோர் சோகப்பட்டியல் நீண்டு செல்கிறது.

இறைவா? நீ சீற்றம் கொண்டது ஏன்? மானிடத்தின் வாழ்வியலில் உனக்கு நம்பிக்கை இல்லாமல் போய்விட்டதா? அல்லது நீ எதிர்பார்த்த அறவாழ்வு இந்த மண்ணில் இல்லை எனக்கருதுகிறாயா?.

இறைவா...! எங்கும் அழுகுரல்கள் உன்நாமத்தோடு ஒலிக்கின்றது. இதற்கு உன்பதில்தான் என்ன? இதுகாறும் வடக்குக் கிழக்கில் நடக்காத ஓர் சீற்றம் உன்னால் அங்கீகரிக்கப்பட்டதும், அமுல் படுத்தப்பட்டதும் எதற்காக?

ஏதும் அறியாத குழந்தைகள் கடலின் சீற்றத்தால் மௌனமாக உறங்குகின்றனவே. இதில் நீ கண்ட திருப்தி என்ன?.

மார்கழித்திருநாள் இறைவழிபாட்டிற்குரிய நன்நாள். அதிலும் மார்கழித் திங்கள் நிறைமதி நாளில் கடலலை சீற்றம் கொள்ளவைத்து மனித உயிர்களை காவுகொண்டு இந்த உலகிற்கு எதை உணர்த்துகிறாய்.


ஆம், இழந்தவர்களுக்கு, பறிகொடுத்தவர்களுக்கு மனித நேயத்தோடு உதவி செய்யும்படி கட்டளை இடுகின்றாய். தர்மம் ஒன்றுதான் இந்த மண்ணில் நிலையானதும் நிம்மதியானதும் என்பதை மீண்டும் வலியுறுத்துகின்றாய்.

மனித வாழ்வு இயற்கையின்-இறைவனின் சீற்றத்திற்கு முன்னால் எம்மாட்டு என்பதை நினைவு படுத்துகிறாய். ஆக ஒட்டுமொத்தத்தில் உன் ஆட்சி இந்த உலகில் இருப்பதை பலநூற்றாண்டுகளுக்குப் பின்னர் மீண்டும் ஓர் தடவை ஞாபகம் ஊட்டியுள்ளாய். அதற்காகத்தான் சீற்றம் கொண்டாயா? இறைவா...!

# புலிகளிடம் இடைக்கால நிர்வாகசபை வழங்கப்பட வேண்டியது அவசியம்

## இரா.சம்பந்தன் வலியுறுத்து

(வடமராட்சி)



அரசு முன் வைத்த யோசனையை புலிகள் ஏற்காத நிலையில் புலிகளிடம் இடைக்கால நிர்வாக சபை வழங்கப்பட வேணடுமென்று வலியுறுத்தி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவுளளது.

இது தொடர்பாக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்றக் குழுத்தலைவர் இரா.சம்பந்தன கருத்துத் தெரிவிக்கையில்,

மக்களின் இயல்பு வாழ்க்கையைக் கட்டியெழுப்புவதற்காக புலிகளினால் சமர்க்பிக்கப்பட்ட இடைக்கால நிர்வாக சபை யோசனை அவசியம்.

அதனால் தான் நாம் இடைக்கால நிர்வாகத்தை வழங்க வேண்டும் என்று கோரி வருகின்றோம்.

இடைக்கால நிர்வாகசபையை ஏற்படுத்திக்கொண்டு முறையாக அமுல்ப்படுத்தப்பட்டால் தான் இந்த நாட்டில் தற்போது உள்ள ஒற்றையாட்சி முறை ஒரு முடிவுக்கு கொண்டு வரப்படும் என்று தமிழ் மக்களுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் நம்பிக்கை உண்டு.

இடைக்கால நிர்வாக சபையை எதிர்ப்பவர்களின் முக்கிய நோக்கம் என்னவென்றால் தற்போது இந்த நாட்டில் உள்ள ஒற்றையாட்சி முறை தொடரவேண்டும்.

அதனாலேயே அவர்கள் இதனை விரும்பவில்லை அது முழுமையாக அமுல்ப்படுத்தப்படுமானால் அவர்களுக்கு தெரியும ஒற்றையாட்சி முறையின் காலம் முடிவடையும் என்பது. இதுவே அவர்களின் அச்சம் என்றும் குறிப்பிட்டார்.

(ரு-8)

## மின் தடையை ஏற்படுத்தும் வகையில்

# பட்டம் விடுவோருக்கு எதிராக பொலிஸார் நடவடிக்கை எடுப்பர்

(பருத்தித்துறை)

வடமராட்சிப் பிரதேசத்தில் பொறுப்பற்ற முறையில் பட்டங்களை ஏற்றி அடிக்கடி மின் தடை ஏற்படக் காரணமாக இருப்பவர்களுக்கு எதிராகப் பொலிஸார் நடவடிக்கைகளை எடுக்கவுள்ளதாக இலங்கை மின்சாரசபை பருத்தித்துறை உதவி மின்பொறியியலாளர் எஸ்.செல்வச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

வடமராட்சிப் பிரதேசத்தில் பட்டமேற்றுபவர்களினால் அடிக்கடி மின்தடையேற்பட்டு மின்பாவனையாளர்கள் பலத்த இன்னல்களையனுபவித்து வருவதோடு பல உயிராபத்துக்கள் ஏற்படவும் காரணமாகின்றது.

இதனைப் பட்டமேற்றுபவர்கள் பொறுப்புணர்வுடன் நடந்து கொள்ள வேண்டும். பட்டமேற்றுபவர்களைப் பெற்றோர்களும் கண்காணித்துக் கொள்ள வேண்டும். அடிக்கடி மின் தடை காரணமாக மின்பாவனையாளர்கள் பலத்த பாதிப்புகளுக்குட்பட்டு வருவதாக நாள்தோறும் மின்பாவனையாளர்கள் புகார் செய்து வருகின்றனர்.

பொறுப்பற்ற முறையில் பட்டமேற்றி மின்தடையை ஏற்படுத்துபவர்களுக்கு எதிராகப் பொலிஸார் சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளனர். இதற்குப் பொதுமக்கள் போதிய ஒத்துழைப்பை வழங்க வேண்டும்.

திருட்டு மின்பாவனையிலீடுபவர்களைக் கண்டுபிடிப்பதற்கான நடவடிக்கைகளும் பொலிஸாரின் உதவியுடன் முடுக்கிவிடப்பட்டுள்ளன.

இலங்கை மின்சாரசபையினர் பொலிஸாருடன் இணைந்து நடாததிய திருட்டு மின்சார திடீர் பரிசோதனைகளின் போது அகப்பட்ட 9 திருட்டு மின்சாரப் பாவனையிலீடுபட்டவர்கள் பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட போது குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து அவர்களுக்குத் தலா 20 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

(க-52)

# மின் இணைப்புப் பணிகள் தற்காலிகமாக இடைநிறுத்தம்

## பணம் செலுத்தியவர்கள் ஏமாற்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் இலங்கை மின்சார சபையினரால் பழைய புதிய மின் பாவனையாளர்களுக்கான மின் இணைப்புக்கள் வழங்கும் பணிகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளமை குறித்து மின் இணைப்புக்களைப் பெற விண்ணப்பித்து உரிய பணக் கொடுப்பனவுகளைச் செலுத்தியவர்கள் மிகுந்த ஏமாற்றமடைந்த நிலையில் இருந்து வருகின்றனர்.

இதுதொடர்பாக இலங்கை மின்சார சபையினரிடம் கேட்ட போது, தற்போது மின் இணைப்புக்களை வழங்குவதற்குரிய வயர்கள்,மின்மானிகள் போன்றவைக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாடே இதற்குக் காரணம் எனத் தெரிவித்தனர்.

ஆயினும், தத்தமது வீடுகளுக்கு மின் இணைப்புக்களைப் பெறுவதற்கென ஆயிரக்கணக்கான ரூபாய்கள் செலவிட்டு நமது வீடுகளுக்கு மின் இணைப்பு வேலைகளை செய்து முடித்து விட்டு வீடுகளுக்கு ஒளி ஏற்றும் தருணத்தில் இலங்கை மின்சார சபையினர் அவர்களை ஏமாற்றி வருகின்றனர்.

அத்துடன் இவ் வகைப்பட்ட ஆயிரக்கணக்கான வீட்டு உரிமையாளர்கள் பழைய புதிய மின் இணைப்புக்களைப் பெறுவதற்கு ஆயிரக்கணக்கான பணத்தை இலங்கை மின்சார சபையின கணக்கில் வங்கிகளில் வைப்புச் செய்துள்ளனர்.

மின் இணைப்புக்களை மின் பாவனையாளர்களுக்கு உரிய நேரத்தில் வழங்க வேண்டும். ஆனால் அதற்குத் தேவையான அடிப்படை உபகரணங்களை பிரதேச அலுவலகங்களுக்கு வழங்குவதில் மின்சார சபையின் உயர்மட்ட அதிகாரிகள் தொடர்ந்தும் அசமந்தப் போக்குடன் செயல்பட்டு வருவதாகக் கூறப்படுகிறது.

இதேசமயம் பளைப் பிரதேச மக்களுக்கும் மின்சாரம் வழங்கப்படும் என பிரதேசசபை அறிவித்து பல மாதங்களாகியும் இன்னமும் மின்சாரம் வழங்கப்படாமை குறித்து அப்பகுதி மக்கள் பெரும் ஏமாற்றமடைந்துள்ளனர்.

இது இவ்விதமிருக்க யாழ்ப்பாணம் மாவட்டத்தில் மினசார சபையின் இணைப்புப் பணிகள் இடைநிறுத்தப்பட்டமை குறித்து அவ்வப்பகுதிப் பொதுமக்கள் பாராளுமன்ற உறுப்பினர்களிடமும் பிரதேச செயலர்களிடமும் தமது அதிருப்தியைத் தெரிவித்து வருகின்றனர் எனவும் அறியப்படுகின்றது. (க-16)

# உப அலுவலகத் திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கமநலசேவைகள் நிலையத்தின் உப அலுவலகம் நேற்று முன்தினம் அரியாலையில் சம்பிரதாய பூர்வமாக யாழ். மாவட்ட அரச அதிபர் செ.பத்மநாதனால திறந்து வைக்கப்பட்டது.

அரியாலை அபிவிருத்திச் சங்கத் தலைவர் எஸ்.ரா.பத்மநாதன் தலைமையில் நடைபெற்ற இவ் வைபவத்தில் பிரதம விருந்தினராக யாழ். அரச அதிபரும் சிறப்பு விருநதினர்களாக யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ், யாழ். மாவட்ட கமநல சேவைகள் உதவி ஆணையாளர் க.சுந்தரேசன், நல்லூர் உதவி பிரதேச செயலர் இராஜேஸ்வரி ரட்ணராஜா, யாழ்ப்பாணம நிக்கொட் பிரதிப் பணிப்பாளர் கே.நவரட்ணராஜா, யாழ். செயலக பிரதம கணக்காளர் சு.சண்முகரத்தினம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

நிக்கொட் நிதியுதவியுடன் கட்டப்பட்ட இக்கட்டடம் நேற்று கமநல சேவைகள் திணைக்களத்திடம் கையளிக்கப்பட்டது. நிகழ்வின் இறுதியில் சமுகமளித்த விவசாயிகளுக்கு இரண்டு தென்னங்கன்றுகள் இலவசமாக வழங்கப்பட்டன. இந்நிகழ்வில் பெருந்தொகையான மக்கள் கலந்து கொண்டனர்.

(ரு-5)

## தினசரி தியானம்

### விவேகச் சிந்தனைகள்

நான் நன்றாகத்தான் இருக்கிறேன் என்று நினைத்துக்கொண்டு இப்போது இறைவனைத் தியானம் செய்ய ஆரம்பிக்கிறேன். அடுத்த நிமிடமே என் மனம் லண்டனுக்குத் தாவுகிறது. அங்கிருந்து இழுத்தால் அது. நான் நியூயோர்க்கில் முன்பு செய்த காரியங்களை நினைத்துப் பார்ப்பதற்காக அங்கு செல்கிறது. தியானத்தினால் தான இந்த அலைகளை நிறுத்த முடியும்.

சுவாமி விவேகானந்தர்

# காரைநகர் அதிர்ந்தது

(காரைநகர்)

காரைநகர் கசூரினா கடற்கரையிலும் கடல்பிரளயத்தினால் ஒருவர் காவுகொள்ளப்பட்டிருக்கிறார்.

விடுமுறையைக் கழிக்கவும், பொழுது போக்கிற்காகவும், கசூரினா கடற்கரைக்கு பலர் சென்றிருந்தனர்.

அப்பொழுது அங்கு திடீரென கடல் பெருக்கடுத்து பெரும் இரைச்சலுடன் அலைகள் கரைப்பகுதியை நோக்கிச் சீறிவந்தன.

இதனால் கடற்கரையில் நின்றவர்கள் அலறியடித்துக்கொண்டு ஓட்டம்பிடித்தனர்.

இந்த அலைச்சுழிக்குள் அகப்பட்டு காரைநகர் சுவாமியம்மன் கோவிலடியைச் சேர்ந்த ஆசைப்பிள்ளை மகாலிங்கம் (வயது 60) என்பவர் உயிரிழந்தார்.

கடற்கரையில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த ஆறு கார்கள் மற்றும் இரண்டு ஹையேஸ் வான்கள் என்பன கடல் அலையில் சிக்குண்டு சிறிதுதூரம் இழுத்துச்செல்லப்பட்டன.

இவை பின்னர் பொலிஸார் மற்றும் விடுதலைப் புலிகளின் அரசியல்துறையினர் ஆகியோரின் உதவியுடன் சகதிக்குள் இருந்து மீட்கப்பட்டன. (த-246)

# தேசிய அனர்த்தமாக ஜனாதிபதி பிரகடனம்

நாட்டில் நேற்றுக்காலை ஏற்பட்ட அனர்த்தத்தை நாட்டின் தேசிய இயற்கை அனர்த்தமாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பிரகடனப்படுத்தியுள்ளார்.

இந்தோனேசியா, சுமத்திரா ஆகிய பகுதிகளில் ஏற்பட்ட பாரிய நிலநடுக்கத்தின் விளைவாக இலங்கையின் கரையோரப் பகுதியில் நேற்றுக்காலை ஏற்பட்ட கடல் கொந்தளிப்பை தேசிய அழிவாக பிரகடனப்படுத்துமாறு லண்டனில் இருந்து ஜனாதிபதி அறிவித்துள்ளார்.

பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தலைமையில் முக்கிய அமைச்சர்கள், ஜனாதிபதியின் செயலாளர், பொலிஸ்மா அதிபர் ஆகியோருடன் விசேட கூட்டம் ஒன்றைக் கூட்டுமாறு ஜனாதிபதி பணித்துள்ளார்.

இதேவேளை நாட்டில் ஏற்பட்டுள்ள அனர்த்தம் தொடர்பாக அவசரகால உதவிகளை வழங்குமாறு சர்வதேச சமூகத்திடம் ஜனாதிபதி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நாட்டின் நிலைமையை அறிந்து ஜனாதிபதி வெகுவிரைவில் நாடு திரும்பவிருப்பதாகவும் ஜனாதிபதி செயலகம் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-4)

## மருத்துவ பீட மாணவர்களுக்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீடத்தைச் சேர்ந்த அனைத்து மாணவர்களையும் இன்று காலை 8 மணிக்கு முன்னதாக உடுபுடைவை வசதியுடன் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு சமுகமளிக்குமாறு மருத்துவபீட மாணவர் ஒன்றியம் கேட்டுள்ளது. (ந)

# பாதிப்பு விபரங்களை உடன் சமர்ப்பிக்குக

### அரச அதிபர் அதிகாரிகளுக்கு அவசர பணிப்புரை

(நெல்லியடி)

வடமராட்சிப் பகுதியில் நேற்றைய தினம் ஏற்பட்ட கடற்பெருக்கினால் உயிரிழந்தோர், காயமடைந்தோர், காணாமல் போனோர் மற்றும் பாதிப்புக்குள்ளானோர் பற்றிய விபரங்களை சேகரித்து உடனடியாக யாழ். செயலகத்தில் சமர்ப்பிக்குமாறு அரசாங்க அதிபர் செ.பத்மநாதன் அரச திணைக்களங்களின் அதிகாரிகளுக்கு அவசர பணிப்புரை விடுத்துள்ளார்.

இதேவேளை பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவ விரும்புவோர் உதவுபொருட்களை யாழ். அரச செயலகத்தில் ஒப்படைக்குமாறு யாழ். அரச அதிபர் செ.பத்மநாதன் கோரிக்கை விடுத்துள்ளார். (ச)

# இலங்கைக்கு உதவிவழங்க நோர்வே, இந்தியா முடிவு

இலங்கையில் கடற்பிரளயத்தினால் ஏற்பட்டிருக்கின்ற பேரழிவுகளுக்கு உதவும் வகையில் நோர்வே 260 மில்லியன் ரூபாவையும், இந்தியா 4 கப்பல் உணவு மற்றும் மருந்துப் பொருட்களையும் இலங்கைக்கு வழங்க முன்வந்துள்ளது.

இவ் உதவிகள் இலங்கைக்கு உடனடியாக கிடைக்கும் வகையில் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

இதேபோல் இலங்கையில் கடல்பிரளயத்தினால் பாதிப்புக்குள்ளான மக்களுக்கு மனிதாபிமான அடிப்படையில் உதவி வழங்க உலக நாடுகள் பல முன்வந்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (இ)

# கீரிமலையில் பயங்கரம்

(வலம்புரிச் செய்தியாளர் குழு)

தென்கிழக்காசியாவை உலுக்கிய கோரமான கடற்பிரளயத்தின்போது கீரிமலை கடற்பரப்பில் பிதிர்க்கடன் நிறைவேற்றிக் கொண்டிருந்த 17 பேர் கடலலையினால் அடித்துச் செல்லப்பட்டதில் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளனர்.

இவர்களில் 10 பேரின் சடலங்கள் நேற்றுப் பிற்பகல்வரை மீட்புப் பணியாளர்களால் மீட்கப்பட்டது.

இவர்களில் பின்வருவோரின் சடலங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

முத்துக்கிருஸ்ணன் அற்புததேவன் (தாவடி), முத்துக்கிருஸ்ணன் ஆனந்தன் (கோப்பாய்), மனோகரன் செந்தூரன் (மல்லாகம்), பிரகலாதன் (கண்ணன்) (தாவடி), இரத்தினசிங்கம் பிரதீப் (நீர்வேலி).

இவ் அனர்த்தத்தில் 07 பேர் காணாமல்போயுள்ளதாக அஞ்சப்படுகிறது. அவர்களின் பெயர் விபரம் வருமாறு:

இ.நிசாந்தன், கு.பிரதீபன், இ.தயாபரன், அ.காங்கேயன், அ.ஜதீசன், க.மனோகரன், வி.தர்சன்.

இவர்கள் மல்லாகம், நீர்வேலி ஆகிய இடங்களில் இருந்து பிதிர்க்கடன் நிறைவேற்ற கீரிமலைக்குச் சென்றவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை கீரிமலையில் பரிதாபகரமான மரணத்தை தழுவியவர்களில் தாவடியைச் சேர்ந்த முத்துக்கிருஸ்ணன் அற்புத தேவன் (மாயவன்) என்பவர் யாழ். மாவட்டத்திலேயே மிகச் சிறந்த அச்சு இயந்திர திருத்த பொறியியலாளர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. இவ் அனர்த்தத்தில் இவரது இரு மகன்களும் காணாமல்போயுள்ளனர். (இ)

## சீற்றங்கொண்டெழு...

கட்டடங்கள் இடிந்து தரைமட்டமாகியுள்ளதுடன் மின்சார கேபிள்களும், தொலைத் தொடர்பு கேபிள்களும் அறுந்து வீழ்ந்துள்ளன.

பெறுமதி மதிப்பிடமுடியாத அளவுக்கு சொத்துக்கள் நாசமாகியுள்ளன. மீன்பிடி படகுகள், வள்ளங்கள், வாகனங்கள், உபகரணங்கள் கடலுக்குள் அள்ளுண்டு சென்றுள்ளன. அவற்றில் பல கரையோரத்தில் தூக்கி வீசப்பட்டு உடைந்து நொறுங்கியுள்ளன.

குழந்தைகள், சிறுவர்கள், முதியவர்கள், ஆண்கள், பெண்கள் என வயது வேறுபாடு இன்றி இறந்தவர்களின் சடலங்களுடன் கால்நடைகளின் சடலங்களும் ஆங்காங்கே சிதறிக்கிடக்கின்றன.

## இரண்டு லட்சம் மக்கள் இடம்பெயர்வு

வடமராட்சியில் இருந்து சுமார் 2 இலட்சம் மக்கள் இடம்பெயர்ந்து பாடசாலைகளிலும் பொது இடங்களிலும் தங்கியுள்ளனர். கடற்பெருக்கு அச்சத்தினால் மக்கள உடுத்த உடுப்புடன் உறவுகள் சொந்தங்களைக் கைவிட்டு உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு தலைதெறிக் ஓடிவந்த காட்சி நெஞ்சை உலுக்கியது.

உறவுகளை, சொந்தங்களை இழந்தவர்கள் அழுது புலம்பிய ஓலம் பரவலாக எழுந்து நெஞ்சை நெகிழ வைத்தது. வரலாறு காணாத பேரவலத்தை சந்தித்த வடமராட்சி மக்களின் துயரம் தொடர்கிறது. மீட்புப் பணிகள் நேற்றுப் பிற்பகல் வரை இடம்பெற்றபோதும் கட்டட இடிபாடுகளுக்குள் இருக்கின்ற சடலங்கள் இதுவரை மீட்கப்படவில்லை.

அப் பகுதியில் மீண்டும் கடற்கொந்தளிப்பு தாக்கலாமென்ற அச்சம் காரணமாக அங்கு நடமாட மக்கள் அஞ்சுகின்றனர்.

தொண்டர் அமைப்புகள், பொது அமைப்புகள் மற்றும் இளைஞர்கள், பொது அமைப்புகள் இடம்பெயர்ந்து வரும் உறவுகளுக்கு ஆறுதல் அளிக்கும் வகையில் சேவையாற்றியமை கண்ணூடாகக் காணக் கூடியதாக இருந்தது.

இதேவேளை கடற்கரையோரத்தில் அமைக்கப்பட்டிருந்த இராணுவக் கடற்படை காவலரண்கள், முகாம்கள் இருந்த சுவடு தெரியாமல் அழிந்துபோயுள்ளன.

இதனால் நூற்றுக்கும் அதிகமான படையினர் இறந்திருக்கலாம் என நம்பப்படுகின்றது.

பெருமளவான சடலங்கள் நேற்றுப் பலாலி இராணுவ வைத்தியசாலையில் வைக்கப்பட்டிருந்ததாக தகவல் வெளியாகியுள்ளது.

ஒரு சில நிமிடங்களில் இயற்கை ஏற்படுத்திய பேரதிர்ச்சி கடல் அனர்த்தம் சோகத்தையும், வேதனையையும் உருவாக்கியதுடன் மக்களை அதிர்ச்சியடையச் செய்து கிலிகொள்ள வைத்துள்ளது.

(இ-52-101-106-35-105-130-29-113-74)

# பிற்போடப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

யாழ்பல்கலைக்கழக கலைப்பீட, வணிக முகாமைத்துவபீட, விவசாயபீட மற்றும் ஏனைய பீடங்களுக்கான பரீட்சைகள் அனைத்தும் மறுஅறிவித்தல் வரை பிற்போடப்பட்டுள்ளதாக யாழ்.பல்கலைக் கழக துணைவேந்தர் எஸ்.மோகனதாஸ் அறிவித்துள்ளார். (இ-4)

★ ★ ★

(யாழ்ப்பாணம்)

தியாகி அறக்கொடை நிறுவனத்தினால் இன்று நடாத்தப்பட இருந்த தையல் கண்காட்சியும், விற்பனையும் தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளதாக தியாகி அறக்கொடை நிறுவனச் செயலாளர் கமலநாதன் தெரிவித்துள்ளார். (ச)

## வடமராட்சியில்...

(வயது 4, சக்கோட்டை), இருதயராசன் அன்ரன் ஜெனிஸ்ரன் (வயது 1 சக்கோட்டை), கனகசபை நாகமுத்து (வயது 70, கற்கோவளம்), மகாலிங்கம் அம்மன் கிளி (வயது 70, வல்வெட்டித்துறை), அந்தோனிப்பிள்ளை அமலோப்பவம் (வயது 65, பருத்தித்துறை முனை), கந்தசாமி ஆறுமுகம் (வயது 68, கற்கோவளம்), அம்பிகாவதி சூரியபிரகாசம் (வயது 9, தும்பளை கிழக்கு), அகிலதாஸ் கிருஷாந் (வயது 9, தும்பளை கிழக்கு), சிவனேஸ்வரராசா கிருஸ்ணப்பிரியா (வயது 9, தும்பளை கிழக்கு), லோகநாதன் கிஷாலினி (வயது 21/2, பருத்தித்துறை),

மனோகரன் சுகந்தன் (வயது 9, சக்கோட்டை), சுந்தரலிங்கம் தங்கமலர் (வயது 47, தும்பளை), சிவபாதம் சிவகரன் (வயது 28, தும்பளை), வின்சன் இராசகுமார் றொப்ஷனா (வயது 3, இன்பருட்டி), செல்வராசா இன்பிலன் (மணற்காடு), செல்லத்துரை கிளி (மணற்காடு), அன்ரன் சேவியர் மரியகுலேந்திரா (மணற்காடு), அன்ரன் சேவியர் லூசியா (மணற்காடு), அந்தோனிப்பிள்ளை அமலஇரக்வேட் (வல்வெட்டித்துறை), சின்னத்துரை மீனாட்சி (தும்பளை), குணரட்ணம் சரஸ்வதி (தும்பளை),

நீக்கிலாப்பிள்ளை ஜோசப் மரியாம்பிள்ளை (வயது 79, மணற்காடு), சூரி ஜெயந்தி (வயது 42, மணற்காடு), சூரி ஜெயபாலன் (வயது 7, மணற்காடு), பிரான்ஸிஸ் சத்தியசீலன் (வயது 26, மணற்காடு), ஆரோக்கியநாதன் லூர்து ராஜசீலன் (வயது 28, மணற்காடு), ஆரோக்கியநாதன் எட்வேட் ஞானசீலன் (வயது 32, மணற்காடு), ஜோசப் செபமாலையம்மா (வயது 85, மணற்காடு),

பன்னீர்ச்செல்வம் மேரி யுனேஸ்ரா (வயது 8, மணற்காடு குடத்தனை).

(த,52, 106, 101)


கண்ணீர் அஞ்சலி

கடலரக்கனின் கோரத்தாண்டவத்திற்கு பலியான அனைவருக்கும்,



எமது இனிய நண்பனான
இரத்தினசிங்கம்
பிரதீப்பிற்கும்

எமது கண்ணீர் அஞ்சலிகள்

சந்திரன் மினி
நண்பர்கள்
கிருசாந், ஆனந்தன், வினோத், ரஜி

நீர்வேலி



எம்முடன் இணைவோர் உயர்கல்வி பெறுவது நிச்சயம்

விக்னா
கல்வி நிறுவனம்
52 , ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

A/L 2007

கலை, வர்த்தக வகுப்புகள்
ஆரம்பம் 02-01-2005 8.30 மணி
பிரிவு 1 எமது வழமையான ஆசிரியர் குழு

(C/921)


இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 27.12.2004 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.